வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk மலர் : 06 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 118 பக்கங்கள் : 16




# தீர்வு கிட்டும்வரை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு நிற்பது அவசியம் - அவசரம்!

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

**ஈழத் தமிழ் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வு காணப்படும்வரை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு செயற்படவேண்டியது அவசிய, அவசரத் தேவையாகும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.**

இந்தத் தேர்தலின் முடிவுகளினூடாக, சிங்கள மேலாதிக்க ஆக்கிரமிப்பாளர்களான ஜே.வி.பி. உள்ளிட்ட எந்த சிங்கள கட்சிகளையும் தமிழர்கள் அங்கீகரிக்கமாட்டார்கள் என்ற செய்தி மிகத் தெளிவாக வெளிப்படுத்தப் படவேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

உள்ளூராட்சித் சபைத் தேர்தலையொட்டி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இதன் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதனை சட்டரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் உறுதியானதொரு கட்டமைப்பாக உருவாக்குவதன் மூலமே கூட்டமைப்புக்குள் ஜனநாயக நடைமுறைகளைப் பேண முடியும்.

அங்கத்துவக் கட்சிகள் தோழமையுடன் செயற்படவும் முடியும். தமிழ் மக்கள் வேண்டி நிற்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் யுத்த வெற்றிவாதத்தை முன்வைத்து ஆட்சியாளர்கள் தொடர்ந்து செயற்படுத்திவரும் பல்வேறு வகை ஆக்கிரமிப்புகள், கலாசார படுகொலைகள் ஆகியவற்றை வினைத்திறனுடன் கையாள்வதற்கு ஏற்ற வல்லுனர் குழுக்களை அமைத்து தீர்வை நோக்கி முன்னேறவும் முடியும்.

ஆனால் 15

## வாக்குரிமையை பயன்படுத்துக!

### மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 27

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுமக்களின் ஆர்வம் குறைவாக இருந்தாலும், 06 ஆம் திகதி வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பல்வேறு காரணங்களால், உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்த பொதுமக்களின் ஆர்வம் மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். 15

## இரத்ததான முகாமில் பங்கேற்க சென்ற தமிழரசுவின் எம்.பிக்கள் வெளியேற்றம்!

### தேர்தல் விதிமுறை மீறல் எனக் கூறி

மட்டக்களப்பு, ஏப். 27

மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் நேற்று காலை இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நடைபெற்ற நிலையில் அங்கு சென்ற மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் முறைப்பாடுகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் இரத்த தான முகாமில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை வெளியேற்றினர்.

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் நினைவு தினத்தினை முன்னிட்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக் குறையை தீர்க்கும் வகையில் இந்த இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. 15

## வடக்கு - கிழக்கு - தெற்கு என அனைத்து மக்களுக்கும் சமமான உரிமை கிட்டும்!

### முல்லைத்தீவில் கூறினார் ஜனாதிபதி



முல்லைத்தீவு, ஏப். 27

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கு தெற்கு என அனைத்துபகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு சமமான உரிமையை வழங்குவதோடு இலங்கையர்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் 15



## பாப்பரசர் பிரான்சிஸ்க்கு நேற்று அமைச்சர் விஜித ஹேரத் அஞ்சலி

வத்திக்கான் சிற்றி, ஏப். 27

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நல்லடக்க ஆராதனையில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கலந்து கொண்டார்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நல்லடக்க ஆராதனை இத்தாலியின் வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பேராலயத்தில் ரோம் நேரப்படி நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நல்லடக்க ஆராதனையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

(அ)

## வட்டுக்கோட்டையில் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்!

### மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஏப். 27

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த மூன்று ஆண்கள் வட்டுக் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமி நீண்ட காலமாக இவ்வாறு பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். 15

## 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஐந்து வருடங்களில் ஒழிக்கப்படும்!

### தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

இன்னும் ஐந்து வருடங்களில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை முற்றாக ஒழிக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஷாந்த பத்மகுமார தெரிவித்தார்.

உலகத்தில் உள்ள மிக மோசமான பரீட்சை ஐந்தாம் தரப் புலமை பரிசில் பரீட்சை எனக் கூறிய அவர், அதனை தடை செய்யாததால் வசதி வாய்ப்புகள் உள்ள பாடசாலைகளுக்கு பின் தங்கிய பாடசாலை மாணவர்கள் செல்வதற்கான வாய்ப்பு 15

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு; யாழ். இரட்டையர்கள் சாதனை

யாழ்ப்பாணம், ஏப்.27

நேற்று வெளியாகியுள்ள கபொத உயர்தர பரீட்சை 2024 பெறுபேறுகளில் யாழ் . போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் சிவநாதன் ஜமுனானந்தாவின் இரட்டைப் புதல்வர்கள் சாதனை படைத்துள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களான இருவரும் உயிரியலில் 3 ஏ பெற்று மாவட்ட ரீதியில் 15



## வவுனியா வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சர் திடீர் விஜயம்!

வவுனியா, ஏப். 27


வடக்கு மாகாண சபையின் ஆதரவுடன் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்ட பொது மருத்துவமனைகளும் அரசின் திட்டத்தின்படி அபிவிருத்தி செய்யப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு தரமான, சிறந்த மற்றும் வினைத்திறனான சுகாதார சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார மற்றும் வெகுஜன 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் 48ஆவது ஆண்டு நினைவு நாள்







யாழ்ப்பாணம், ஏப். 27

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் 48ஆவது ஆண்டு நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் ஏற்பாட்டில் யாழிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தந்தை செல்வா அறங்காவற் குழுத் தலைவர் கலாநிதி சு. ஜெபநேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனும் சிறப்பு விருந்தினராக தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி. வி. கே சிவஞானமும் கலந்துகொண்டனர்.

ஈழத்து தமிழ் பேசும் மக்கள் அரசியலின் தனிகரற்ற தலைவன் தந்தை செல்வா என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா நிகழ்த்தினர். (எ-05)





# வவுனியாவில் தந்தை செல்வாவின் 48ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு

வவுனியா, ஏப். 27

வவுனியாவில் தந்தை செல்வாவின் 48 ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா, மணிக்கூட்டு கோபுர சந்தியில் அமைந்துள்ள அவரது சிலை முன்பாக நேற்றுக் காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்தும், மலர் தூபியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# உள்ளூராட்சித் தேர்தல் குறித்து முன்னாயத்த கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஏப். 27

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடனான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதாகவும் அதற்கு காத்திரமான பங்களிப்பு வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்ததுடன், இம்முறையும் பிரதேச செயலாளர்களின் பங்கு அதிகளவில் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும், தங்கள் பிரிவில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் தெரிவித்ததுடன் தேர்தல் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது.

இதில், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களான பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.(எ)

# மக்களை சமமாக மதித்தால் கட்சிகளின் தேவை இருக்காது

## சத்தியலிங்கம் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, ஏப். 27

மூவின மக்களும் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அப்போது, தமிழ்க் கட்சி, சிங்களக் கட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு விட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மோகம் 30 நாள் என்று சொல்வார்கள். அந்த மோகத்தில் வந்த ஒரு கட்சி தாங்கள் தான் தமிழ்மக்கள், முஸ்லிம் மக்களுடைய ஒட்டுமொத்த பிரதிநிதிகள் என்று சொல்கிறார்கள். ஒரு தேர்தலில் வென்றுவிட்டு அவ்வாறு சொல்ல முடியாது. இந்தத் தேர்தல் முறையால் மாத்திரமே அவர்கள் வென்றார்களே தவிர ஒட்டுமொத்த தமிழ்மக்களின் மனங்களை கவர்ந்து வெல்லவில்லை.

இந்த நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்று இலங்கை மக்கள் விரும்பினார்கள். இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆண்டவர்கள் நாட்டின் தேசிய வளங்களை பயன்படுத்தி நாட்டு மக்களை கையேந்த வைத்தனர். எனவே, மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பி இந்த அரசை கொண்டுவந்தார்கள். அந்த மாற்றத்தை நாங்களும் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நாடு ஊழற்ற சிறந்த நிர்வாகத்தை கொண்ட, கொள்ளையடிக்காதவர்களை கொண்ட ஒரு நாடாக இருக்க வேண்டும் என்பது ஒட்டுமொத்த மக்களின் அவா. அந்த விருப்பம் எமக்கும் இருக்கிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்த நாட்டை நிர்வகிக்க முடியாது. நாங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கின்றோம். தமிழ் மக்களின் பிரச்னை நீண்டகால பிரச்னை.

எனவே, தமிழ்த் தேசிய பிரச்னையை தீர்க்க யார் முன் வருகின்றார்களோ அவர்களுடன் இணைந்து பயணிக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

ஆனால், இந்த அரசு தெரிவு செய்யப்பட்ட ஆறுமாதத்திலேயே அவர்களது பயணம் வித்தியாசமாக இருக்கிறது.

மூவின மக்களும் இந்த நாட்டில் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அன்று தமிழ்க்கட்சி சிங்களக் கட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதனை நம்பியே மக்கள் வாக்களித்தனர். எனவே குறுகிய நோக்கத்துக்காக மக்களை நீங்கள் ஏமாற்றினால் இந்த நாடு ஒருநாளும் மீட்சியடையாது.

ஆனையிறவு உப்பில் ருசியைத் தான் பார்க்க வேண்டும், பெயரைல்ல என்று அமைச்சர் பிமல் கூறினார். அவர் கூறுவது உண்மை தான். ஆனால், தெற்கில் உங்களுக்கு பிறக்கின்ற பிள்ளைகளுக்கும் சத்தியலிங்கம் என்று பெயரை வையுங்கள். ஏன் ரத்நாயக்க, விமல் வீரவன்ஸ, அந்த வன்ஷ, இந்த வன்ஷ என பெயர் வைக்கிறீர்கள்.

சத்தியலிங்கம், சுந்தரலிங்கம், பொன்னம்பலம் என உங்களது பிள்ளைகளுக்கும் பெயரை வையுங்கள். ஏன் என்றால் உங்களுக்கு பிள்ளைகள் தானே வேணும். பெயர் முக்கியமில்லை தானே. அதற்கு பிறகு நாங்கள் வாயை மூடிக் கொண்டு இருக்கின்றோம்”- என்றார். (எ-10)

யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய

# உணவக உரிமையாளருக்கு 25ஆயிரம் ரூபாய் அபராதம்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றின் உரிமையாளருக்கு 25ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகரால் உடல்நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, கழிவு நீரினை வெளிச்சூழலுக்கு வெளியேற்றியமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்பதற்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்யத் தவறியமை, கையில் வெட்டுக்காயங்களுடன் உரிய பாதுகாப்பு கவசம் இல்லாமல் உணவை கையாண்டமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு எதிராக குறித்த உணவகத்துக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அந்த உணவகத்தின் உரிமையாளருக்கு 25ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.(எ)

# போத்தலால் காயப்படுத்தியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

வவுனியா, ஏப்.27

வவுனியா போகஸ்வெவ பகுதியில் போத்தலால் தன்னைத்தானே தாக்கிக் காயப்படுத்திய நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த [illegible] கடந்த 24 [illegible] திகதி மாலை போத்தல் ஒன்றின் மூலம் தனது வயிற்றுப்பகுதியில் குத்தினார்.

இதனால் காயமடைந்த அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

சம்பவத்தில் போகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த சமன்குமார என்ற ஒரு பிள்ளையின் தந்தையே மரணமடைந்தார்.

இதேவேளை அவரது மனைவி வெளிநாடு ஒன்றில் வசிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் போகஸ்வெவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுடன் இணைந்து செயல்பட முஸ்லிம் காங்கிரஸ் முயற்சித்தது

## கலையரசன் தடை ஏற்படுத்தினார் என்கிறார் ஹக்கீம்

சம்மாந்துறை, ஏப். 27

**அம்பாறை மாவட்டம் சம் மாந்துறை பிரதேச சபையின் எல்லைகள் நிறைய பிரச்னைகளைக் கொண்டவை. அவற்றில் வீரமுனை வட்டாரம் நிறைய பிரச்னைகளை கொண்டது. அவற்றுக்கு தீர்வு காணும் மாற்று வழியாக சம்மாந்துறை பிரதேச சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் எங்களின் வேட்பாளரை போட்டியிட செய்து அவர்களின் உடன்பாட்டுடன் அந்த வட்டாரத்தை வெல்ல வைக்கமுடியுமா? என்ற முயற்சியையும் இம்முறை செய்து பார்த் தோம். இதேபோன்ற பிரச்னை நாவிதன்வெளியிலும் இருநதது. இந்த விடயங்களில் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைகள் இணக்கம் தெரிவித்தன. துரதிஷ்டவசமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இணங்கவில்லை என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**



சம்மாந்துறை பிரதேச சபைக்கு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்மாந்துறை பிரதேச சபையின் வீரமுனை வட்டாரத்தில் நிர்மாணப்பணி ஒன்று தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று இருந்த போதிலும் மு.கா. செயலாளர் நிஸாம் காரியப்பரை அந்த வழக்கில் ஆஜராக வேண்டாம் என்று சொல்லியிருந்தேன். ஏனெனில் இந்த விடயத்தை சாதித்து கொள்வதற்காக. அவை ஒன்றும் சாத்தியமாகவில்லை. ஏனெனில் சென்ற தடவை கூட நாங்கள் ஆட்சியை கைப்பற்றுவதில் அந்த வட்டாரத்தினால் நிறைய குளறுபடிகள் ஏற்பட்டன என்பது எல்லோருக்கும் தெரியும்.

மேலும், தொலைபேசி சின்னம் (ஐக்கிய மக்கள் சக்தி) செத்து போய்விட்டது. அவர்களுடனான உறவு, இந்தத் தேர்தலில் மட்டுமல்ல இனிவரும் தேர்தல்களிலும் தொடருமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. தொலைபேசி சின்னத்துக்கு இங்கு வாக்களிக்க சொல்ல நாங்கள் இன்னும் தயாராக இல்லை. கண்டி மாவட்டத்தில் தனித்து கேட்கும் தீர்மானத்தை எடுத்துள்ளேன். வேட்பாளர்களினதும், அமைப்பாளர்களினதும் மன்றாட்டம் காரணமாக 03 இடங்களில் மட்டும் நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் எங்களின் வேட்பாளர்களை களமிறக்கியுள்ளோம். 11 இடங்களில் தனித்து களமிறங்கியுள்ளோம் - என்றார்.

(எ-06)

# தமிழ்த் தேசிய பேரவை வேட்பாளர் திருகோணமலை நகரில் அறிமுகம்



திருகோணமலை, ஏப். 27

திருகோணமலை நகரசபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசிய பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் கடந்த வியாழக்கிழமை திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலாளர் கி. சிறீ பிரசாத் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் ந. சிறீகாந்தா, சமூக - அரசியல் செயல்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க. சுகாஸ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அரங்கு நிறைந்த சனத்திரளுடன் நடைபெற்ற இக்கூட்டத்துக்கான ஏற்பாடுகளை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளரும், நகர சபைக்கான தலைமை வேட்பாளருமான க. குகன் மேற்கொண்டிருந்தார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் கடந்த காலங்களில் தேர்தல்களில் போட்டியிட்டு வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது தமிழ்த் தேசியப் பேரவை என்னும் கூட்டணியாக மாற்றம் பெற்றுள்ளது. இந்த அணியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக் கம், தமிழ்த் தேசியக் கட்சி, சனநாயகத் தமிழ் அரசுக் கட்சி ஆகியன இணைந்துள்ளன.

திருகோணமலை நகரசபை தேர்தலின் பின்னர் மாநகர சபையாகத் தரமுயர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக

# மன்னாரில் இருவர் சுட்டுக்கொலை: அதிரடிப்படையினரால் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 27

மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 2ஆவது மைல்கல் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், மன்னார் கொட்டவெளி பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் ஆவார்.

இவர் மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக இருவரை சுட்டுக்கொலை செய்த பிரதான சந்தேக நபர்களுக்கு தப்பிச் செல்வதற்கு உதவி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு கையடக்கத் தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும்

# வேட்பாளர் ஒருவரின் கணவன் போலி ஆவணங்களுடன் கைது

பாணந்துறை, ஏப். 27

போலி ஆவணங்களைத் தயாரித்ததாக கூறப்படும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் கணவன் பாணந்துறை வடக்கு பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை வடக்கு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் பாணந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 66 வயதுடைய பண்டாரகம பிரதேச சபையின் ஓய்வு பெற்ற ஊழியர் ஆவார்.

சந்தேக நபரின் மனைவி எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் 2023 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள், கிராம சேவைச் சான்றிதழ்கள், போலி முத்திரைகள் தயாரித்தல் போன்ற குற்றச்சாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து பல போலி ஆவணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஏப்.27

கட்டுநாயக்கா, ஹீனடியன பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 29 வயது உதார சதுரங்க என்ற இளைஞன் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முதற்கட்ட விசாரணைகளில், அடையாளம் தெரியாத இரு துப்பாக்கிதாரிகள் ரி-56 துப்பாக்கியைப் பயன்படுத்தி இரண்டு முறை சுட்டதாக தெரியவந்துள்ளது.

காயமடைந்த இளைஞன், வட்டிக்கு பணம் வழங்குவது மற்றும் பல வணிக நிறுவனங்களை நடத்தி வருபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனது தந்தையுடன் வீட்டில் உள்ள அறையில் உறங்கிக் கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இரு துப்பாக்கிதாரிகள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

காயமடைந்த இளைஞன் முதலில் மினுவாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கம்பஹா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(எ)



யாழ்ப்பாணம், அராலி மேற்கு மலரும் மலர்கள் சிறுவர் பாடசாலையில் சிறுவர் சந்தை நேற்று முன்தினம சிறப்பாக நடைபெற்றது. பாடசாலையின் பொறுப்பாசிரியர் கஜன் ராஜ் டிலுசியா தலைமையில் இந்த சிறுவர் சந்தை நடைபெற்றது. இதன்போது மாணவர்கள் பல்வேறு விதமான பொருட்களை சந்தைப்படுத்தினர். இந்த சந்தை நிகழ்வில் பெற்றோர், ஊர்மக்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறுவர்களி[illegible] அவர்களை உற்சாகப்படுத்தினர். (படங்கள்: கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆட் கடத்தல்களில் ஈடுபட்டோர் யாரும் இம்முறை தப்ப முடியாது

## பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர உறுதி

மட்டக்களப்பு, ஏப். 27

**ஊழல் மோசடிகள், படுகொலைகள் மற்றும் ஆட் கடத்தல்களில் ஈடுபட்டோர் யாரும் இம்முறை தப்பிக்க முடியாது. அரசாங்கம் இந்த விடயங்களில் உறுதியாக உள்ளது என்று வெளிவிவகார பிரதிய மைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.**



நாம் சரியான விடயத்தை முன்வைக்கின்றோம். கடந்த காலங்களில் சட்டத்தில் இருந்த ஓட்டைகளை பயன்படுத்தி பலர் தப்பித்தார்கள் என்றால், இனி வரும் காலங்களில் அது இடம் பெற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, களுதாவளை வட்டாரத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கான காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் இடம்பெற்ற சண்டை சச்சரவுகள் இப்போது இடம் பெறுவதில்லை. ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் விவாதிப்பதற்கான நேரம் பாராளுமன்றத்தில் தாராளமாக கொடுக்கப் படுகிறது.

நாம் அந்த அரசியலை இதற்குள் கொண்டுவர தேவையில்லை. நாங்கள் நம்புகின்றோம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் அனைத்து பிரதேச சபை களையும் கைப்பற்றுவோம். இந்த சபைகள் ஊடாக எமது அபிவிருத்திப் பணிகளை மிகவும் துரிதமாக எடுத்துச் செல்ல முயல்கின்றோம்.

குற்றச்சாட்டுக்களை முன்வைத்துதான் நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த விசாரணைகளின் அடிப்படையில்தான் கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில விசாரணைகளை அவதானித்தால் சிறிய குற்றச்சாட்டுக்களாக இருக்கின்றன, சில விசாரணைகளை அவதானித்தால் நடுத்தரமான குற்றச்சாட்டுக்களாக இருக்கின்றன, இன்னும் சில குற்றச்சாட்டுக்களை பார்த்தால் மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன, விசாரணைகளை மேற்கொள்கின்ற அந்தந்த நிறுவனங்கள், அமைப்புகள் அது தொடர்பான விடயங்களை மிகவும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் மேற்கொள்கின்றன.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களை வைத்து, எதிர்த்தரப்பினர் அரசியல் பழிவாங்கல் என்று கூறுகின்றனர். நாம் கூறுவதெல்லாம் எதிர்க்கட்சியினர் இதுவரை காலமும் அவர்கள் ஊழல்களில் ஈடுபட்டிருந்தால் அதனை அவர்களாகவே ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இனி வரும் காலங்களிலாவது எந்த ஒரு ஊழல் மோசடியிலும் ஈடுபட வேண்டாம்.

கைது செய்யப்படுபவர்கள் தொடர்பில் எந்தவித அரசியல் தலையீடுகளும் இல்லை. நாங்கள் எந்தவித விசாரணைகளிலும் கைதுகளிலும் எந்தவித தலையீடுகளையும் மேற்கொள்வதில்லை.

ஊழல்வாதிகளுக்கும் மோசடிக்காரர்களுக்கும் ஆட்கடத்தல் காரர்களுக்கும் படுகொலை செய்தவர்களுக்கும் வாக்களிப்பதற்கு மக்கள் இருக்கின்றனர். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தினால் அவர்கள் வாக்களிப்பதற்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, மக்களுக்கு நாம் கூறிக் கொள்வதெல்லாம் ஒன்றுதான். தயவுசெய்து மீண்டும் அவ்வாறான குற்றவாளிகளுக்கு வாக்களிக்க வேண்டாம். தேசிய மக்கள் சக்தி உங்களுக்கான கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றது" - என்றார். (எ)



# தந்தை செல்வாவுக்கு அஞ்சலி

திருகோணமலை, ஏப். 27

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் 48ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று திருகோணமலை சிவன்கோவிலடியில் உள்ள அவரது உருவச்சிலைக்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. குகதாசன், மாநகர சபை வேட்பாளர் க. செல்வராஜா மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (எ-04)

# மின்னல் தாக்கி வயோதிபர் பலி!

பொலநறுவை, ஏப்.27

பொலநறுவை - அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெகுலுவெல பிரதேசத்தில் உள்ள வயல்வெளி ஒன்றில் மின்னல் தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

அரலகங்வில,கெகுலுவெல பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய வயோதிபர் ஒருவரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மற்றுமொரு நபருடன் இணைந்து வயலில் வேலை செய்துகொண்டிருக்கும் போது மின்னல் தாக்கி காயமடைந்தார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக அரலகங்வில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.(எ)

# சஜித் பிரேமதாஸவை காட்டிலும் நாமல் ராஜபக்ஷ முன்னிலையில்

## பொதுஜன பெரமுன சொல்கிறது

கொழும்பு, ஏப். 27

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை காட்டிலும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முன்னிலையில் உள்ளார். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார மேடைகளில் உரையாற்றுவதைத் தவிர பதவிக்கான கடமைகள் ஏதும் தற்போது இல்லை என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,


2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன அக்காலப்பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல்களில் மேடை ஏறி தனது கட்சியை பிரபல்யப்படுத்தவில்லை. பதவிக்கான கௌரவத்துடன் செயல்பட்டார். அதேபோன்று 2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அதே ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தல் பிரசார மேடைகளில் ஏறவில்லை.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார மேடைகளில் ஏறி தொடர்ந்து பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். கட்சிக்காக பிரசாரம் செய்வதை முன்னிலைப்படுத்திக்கொண்டு செயல்படுகிறார். அரச தலைவருக்கான பொறுப்புக்களை மறந்துவிட்டு செயல் படுகிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை காட்டிலும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ முன்னிலையில் உள்ளார். நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிகளவான உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளை நாங்கள் கைப்பற்றுவோம்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய் என்பதை மக்கள் நன்கு விளங்கிக்கொண்டுள்ளார்கள். ஆகவே, போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டதற்கு மக்கள் அரசாங்கத்துக்கு தகுந்த பதிலடி கொடுப்பார்கள்- என்றார். (எ)

# பாப்பரசர் மறைவுக்கு நாமல் எம்.பி. இரங்கல்



கொழும்பு, ஏப். 27

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்றுச் சனிக்கிழமை கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்கு சென்று மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்க்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இதன்போது இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் பிரையன் உதைக்வே ஆண்டகைக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் உரையாடல் இடம்பெற்றது.

கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்கு சென்று பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸூக்கு எனது இரங்கலைத் தெரிவித்ததில் நான் பெருமை கொள்கிறேன். மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இரக்கம், பணிவு மற்றும் சமூக நீதிக்கான அர்ப்பணிப்பு ஆகியன உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களை ஆழமாகப் பாதித்தன என நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (எ)

# கஞ்சா செடிகளுடன் இருவர் கைதாகினர்

அம்பாந்தோட்டை, ஏப். 27

அம்பாந்தோட்டை - லுனுகம்வெஹெர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட படிகெபுஹெல பகுதியில் கஞ்சா செடிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

லுனுகம்வெஹெர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராமை பகுதியில் வசிக்கும் 29 மற்றும் 38 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 2,107 கஞ்சா செடிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுனுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு
27.04.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# தோல்வியின் 48 ஆண்டுகள்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 48ஆவது நினைவு தினம், வழமைபோல், அவரது கட்சியின் தொண்டர்களால் ஆங்காங்கே நினைவு கூரப்பட்டிருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பலர், செல்வநாயகம் என்று ஒருவர் இருந்திருக்கின்றார், அவர்தான் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்தவர் என்பதை அறிவதற்கு இந்த நினைவு கூர்தல்கள், ஒரு வேளை பயன்பட்டிருக்கலாம்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மூலம் அரசியல் வாழ்வை ஆரம்பித்த செல்வநாயகம், பின்னர், ஜி.ஜி.பொன்னம்பலம் தவறான பாதையில் செல்கின்றார் - என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் வெளியேறி, இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார். 1970களுக்கு பின்னர், அரசியல் நிலைமைகள் பெரியளவில் மாற்றமடைந்து சென்றது - இந்த நிலையில், புதிய சூழலுக்கு ஈடுகொடுப்பதற்கு தமிழ் அரசுக் கட்சி பொருத்தமற்றது என்பதை உணர்ந்து, தமிழர் விடுதலைக் கூட்டணியை ஸ்தாபித்தார். சமஷ்டியை அடையும் இலக்குடன் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கிய செல்வநாயகம், சமஷ்டியை தன்னால் அடைய முடியாது என்பதை உணர்ந்த போது, தனிநாட்டு கோரிக்கையை தூண்டினார்.

இது மிகவும் முரண்பாடான அரசியல். ஏனெனில், சமஷ்டியை அடையும் இலக்கில் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்தார், அந்த முயற்சி வெற்றிபெறாத போது, தனிநாட்டை அடைவதற்காக. தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்தார். ஆனால், அடையும் வழி தெரியாமலேயே கட்சியை, உருவாக்கி, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து பார்த்து, இறுதியில் தனது சீடர்களுக்கு தோல்வியை ஒப்படைத்துவிட்டு காலமானார். சக்கரநாற்காலியில் இருக்கும் செல்வநாயகம் தனிநாட்டை எவ்வாறு பெற்றுத் தருவார் என்று அன்றிருந்த தலைமுறை சிந்திக்கவில்லை. அவரது வழியில் வந்தவர்களோ இறுதியில் சமஷ்டியையும் கைவிட்டு, தனிநாட்டையும் கைவிட்டு, மாவட்ட சபையின் மூலமான அரசியல் தீர்வை நோக்கிச் சென்றதே வரலாறு.

செல்வநாயகம் விட்டுச் சென்ற தோல்வி வரலாற்றை மிகவும் பத்திரமாக பாதுகாக்கும் கைங்கரியத்தையே அவரது வழித்தோன்றல்கள் என்போர் இன்றும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். செல்வநாயகத்தின் இரண்டு கட்சிகளாலும் தமிழ் மக்கள் எதைப் பெற்றுக் கொண்டார்கள் என்று இன்றுள்ள இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் கேட்டால், கூறுவதற்கு அந்தக் கட்சியிடம் பதில் இல்லை. செல்வநாயகத்தினால் விதைக்கப்பட்ட மிதவாத அரசியலின் தோல்விதான், பின்னர் இளைஞர்களின் ஆயுதப் பேராட்டப் பாதையாக மாற்றம் பெற்றது. மிதவாதத்தின் தோல்விதான் ஆயுத விருப்பாகும்.

ஆயுதப் பாதையில் சென்றவர்களின் சரி பிழைகளுக்கு அப்பால், அவர்களிடம் கூறுவதற்கு ஒரு வழியிருந்தது - அதாவது, ஆயுத பலம் கொண்டு இலக்கை அடைவது. அதிகாரம் என்பது துப்பாக்கிக் குழலிலிருந்து பிறக்கின்றது என்பதுதான் அன்றைய ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் தாரக மந்திரமாக இருந்தது. எனினும் இந்தியாவின் ஆதரவின்றி அது ஒரு போதும், முடியாது என்பதை பலரும் அறிந்து, புரிந்து வெளியேறிய போது, விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் அந்தப் பாதையில் நம்பிக்கையுடன் பயணித்தது. இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தமிழர்களின் ஆற்றல், வளம் அனைத்தும் உச்சமாகப் பயன்படுத்தி, பனைமரமாக உயர்ந்து, இறுதியில் முறிந்து போய், உக்கி கரைந்தனர்.

இன்றைய சூழலில் செல்வநாயகத்தின் வழிகாட்டல் என்று கூறுவதற்கு என்ன இருக்கின்றது? அவரைப் பின்தொடர்வதாகக் கூறிக் கொள்வோர், அவரால் அடைய முடியாமல் போனதை எவ்வாறு அடையப் போகின்றனர்? செல்வநாயகத்தை நினைவு கொள்வதை ஓர் அரசியல் செயல்பாடாகக் காண்பிக்க முற்படுபவர்களின் பதில் என்ன? ஆகக் குறைந்தது தமிழ் அரசுக் கட்சி ஒரு கட்சிக் கட்டமைப்புடன் கூட இல்லை. செல்வநாயகத்தை நினைத்தல் என்பது உண்மையில் தோல்வியை நினைத்தல்தான்.

அச்சுறுத்தலுக்கு மத்தியில்

# பாப்பரசருக்கு வவுனியாவில் அஞ்சலி!






வவுனியா, ஏப். 27

புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாப்பரசர் பிரான்சிஸூக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வத்திகானில் காலமான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்கள் இடம்பெற்று வருவதுடன் நேற்று நாடளாவிய ரீதியில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த வகையில் வவுனியா தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் தொடர் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக உள்ள கொட்டகைக்கு முன்பாக கையில் தீபமேந்தியவாறு அஞ்சலி செலுத்தியதுடன், பாப்பரசரின் திருவுருவப் படத்துக்கு ஒளிதீபமும் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, அரச புலனாய்வாளர்களால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டதுடன், செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களையும் படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டனர். (எ-10)

# அன்று இங்கு எவ்வாறு வந்தேனோ அதேபோன்று இன்றும் வந்துள்ளேன்

## நெடுந்தீவில் மக்கள் சந்திப்பில் டக்ளஸ்

நெடுந்தீவு, ஏப். 27

நான் நெடுந்தீவுக்கு நன்றியையும் விசுவாசத்தையும் எதிர்பார்த்து வரவில்லை. இந்த நெடுந்தீவு மண்ணில் அன்றொருபொழுது மக்களின் துயர் துடைக்க பதவிகள் இல்லாதபோது எவ்வாறு வந்தேனோ அதேபோன்றுதான் இன்றும் உங்களிடம் வெறும் டக்ளஸ் தேவானந்தாவாக வந்துள்ளேன் என்று ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நெடுந்தீவு பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று நடைபெற்ற பரப்புரை கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தீவகத்துக்கும் ஈ.பி.டிபிக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் நீண்ட வரலாறும் உண்டு.

தீவக பிரதேசங்கள் அனைத்திலும் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் எமது கட்சியினாலேயே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த செயல் திட்டங்களின் தொடர்ச்சியை தடையின்றி தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றிபெறச் செய்து எதிர்காலத்தை தமக்கானதாக உருவாக்கிக் கொள்வார்கள் என்றும் டக்ளஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ)

# குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.27

நல்லூர் தேரடிச் சித்தர் செல் லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அபிஷேகம், திருமுறை மற்றும் நற்சிந்தனை ஓதலைத் தொடர்ந்து, 'பழமையை பேணல்' எனும் தொனிப் பொருளில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சைவ சித்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத் துரை சந்திரசேகரம் உரையாற்றவுள்ளார். (எ)

# டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழல் மூவருக்கு 22,500 ரூபாய் அபராதம்!


யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை பகுதியில் டெங்கு நுளம்பு பெருகக் கூடியவாறு சூழலை வைத்திருந்த குடியிருப்பாளர்களுக்கு 22 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் ஆளுகைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்கள் குடியிருப்புகளுக்கு, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சென்ற வேளையில் டெங்கு நுளம்பு பெருகக்கூடியவாறு சூழலை பேணிய மூன்று குடியிருப்பாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதித்தல்... கேட்டல்... செயல்படல்!

நம்முடைய அன்றாட வாழ்வைக் கவனிப்போம். நாம் சக மனிதரை முதலில் மதிக்கிறோமா? அவர் என்ன நினைக்கிறார் என்பதை அவர் சொல்லவரும்போது காது கொடுத்துக் கேட்கிறோமா?


அவருடைய உருவம், நிறம், ஜாதி, மதம், கட்சி, பணபலம், நபர் பலம், கௌரவம், புகழ் போன்ற அடையாளங்களை வைத்து மட்டுமே அவரை அணுகுகிறோமே தவிர, அவர் சொல்வதை முழுமையாகக் கேட்பதில்லை. அலட்சியம் காட்டி, குறுக்கிட்டுப் பேசி , அவரைச் சீர்குலைக்கப் பார்க்கிறோம். இதன்மூலம் அவரைவிட நாம் ஒரு படி பெரியவர் என்ற நிலைப்பாட்டை உறுதி செய்ய முயல்கிறோம். 'நான் சொல்வதே சரி' என்று ஆணவம் கொண்டு பேச முயல்கிறோமே தவிர, பணிவுடன் அனுமதி பெற்றுப் பிறரிடம் பேச முயல்வதில்லையே.

இரண்டு பேருக்குள் ஒரு பிரச்னை என்றால், மூன்றாம் நபரிடம் சொல்லித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஓர் இயலாமையும், சுய இரக்கமும் நம்மிடம் குடிகொண்டிருக்கின்றன. நமக்குள் இருக்கும் சுய ஆளுமையுடனும் நம்பகத்தன்மையுடனும் இருவருக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை நமக்கு வருவதில்லை.

இன்னொரு மிக மோசமான பழக்கம் நம்மிடம் உள்ளது. அது ஒருவரைப் பற்றிய தவறான வதந்திகளைப் பரப்பிவிடுதல். வதந்திகளைக் கேட்க விரும்புதல், மற்றவர்களுடைய வாழ்வின் ரகசியங்களை எல்லை தாண்டி அறிய விரும்புதல் ஆகியவை அதிகரிப்பது தான் தொலைத்தொடர்பு சாதனங்கள் 'கிசுகிசு' செய்தி களைப் பரப்புவதற்குக் காரணமாய் அமைகின்றன.

நம்மிடம் இன்னும் ஒரு மோசமான பழக்கம் உண்டு. நாம் ஏதாவது தவறு செய்தால் நாமே முன்வந்து அந்தத் தவறை ஒப்புக்கொள்ள மாட்டோம் மன்னிப்புக் கேட்க மாட்டோம் ஒரு தவறை மறைக்க மேன்மேலும் தவறுகளைச் செய்து கொண்டே இருப்போம்.

சட்டங்களை நாம்தான் நமக்காக இயற்றினோம். ஆனால், நாமே அவற்றை மதிக்க மாட்டோம்! இது என்ன ஒரு முரண்பாடான வாழ்வியல்? மக்களைத் திருத்த கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டாலும், அவற்றை நிறைவேற்ற கடுமையான மனிதர்கள் தேவைப்படுகிறார்கள்! இந்த முயற்சி, இறுதியில் சர்வாதிகார ஆட்சிக்குத்தானே இட்டுச்செல்லும்?



சுய சிந்தனையும், சுய கட்டுப்பாடும், சுய சார்பும் தனி மனித ஒழுக்கமாய் வளர்க்கப்படாததே இதற்கு மூலகாரணம் அல்லவா?

ஒழுக்கம் என்பது என்ன? ஒவ்வொரு குழந்தையும் சுயமாக யோசித்துக் கண்டறிந்து, முடிவுக்கு வந்து, அதன்படி அஞ்சாமல் சுய கட்டுப்பாட்டுடன் வாழ்வதுதானே உண்மையான ஒழுக்கம்?

எனவே, மக்கள் இப்போதிருந்தே ஒரு புதிய பண்பாட்டு வாழ்வியலை மேற்கொள்ள முன்வர வேண்டும். மற்றவர் தன்னிடம் பேச முன் வரும்போது, குறுக்கே பேசாமல் முழுமையாகக் கவனித்துக் கேட்க வேண்டும். தான் பேச வேண்டும் என்றால், பிறரிடம் பணி வுடன் அனுமதி பெற்றுப் பேச வேண்டும். இரண்டு பேருக்குஇடையே உண் டாகும் பிரச்னைகளை மூன்றாம் நபரிடம் சென்று உதவியை நாடாமல், தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள முயல வேண்டும்

மாற்றவே முடியாத அம்சங்களைக் குறை கூறிப் புலம்பாமல், மனமுவந்து ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும். வேற்றுமை பல இருப்பினும் சமத்துவம் பேண வேண்டும்.

ஒருவர் இல்லாதபோது, அவரைப் பற்றி எந்தவித வதந்திகளையும் பேசுவதில்லை என்றும், பரப்புவதில்லை என்றும் முடிவெடுக்க வேண்டும்.

சிறிய தவறு, பெரிய தவறு எதுவாயினும் தானே முன்வந்து ஒப்புக் கொண்டு, இனி அப்படித் தவறு செய்வதில்லை என்று முடிவெடுக்க வேண்டும்.

பேராசையுடன் எதையும் எந்த வழியிலும் அடைய லாம் என்ற மனப்போக்கை விடுத்து, அறநெறி வழியில், அவசியத் தேவைகளை மட்டுமே பெற முன்வர வேண்டும்.

சக மனிதனை மட்டுமல்ல, அனைத்து உயிரினங்களையும் நேசிக்க வேண்டும். எல்லாருக்கும் நல்வாழ்வு கிடைக்க உழைக்க வேண்டும்.

இந்த அடிப்படை வாழ்வியல் மதிப்பீடுகளைப் பின்பற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

மாணவர்களுடைய சுயசிந்தனை, படைப்பாற்றல் மிளிரும் வகையில், அவர்களே இயற்கையில் இருந்தும் மற்றும் செய்யும் பணிகளில் இருந்தும் சுயமாய் கற்கும் வகையில் இன்றையக் கல்வி முறையை மாற்ற வேண்டும். சுயசார்புடன் வாழ்வதற்குக் கைத்தொழில்களில் பயிற்சியும், ஓவியம், இசை ஆகிய நுண்கலைகளில் பயிற்சியும், மண்ணின் பெருமைகளை எடுத்தியம்ப அறிஞர்களுடனான சந்திப்பையும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

இன்றைய மாணவர்கள் ஒவ்வொருவரும் சுய சிந்தனை, சுய கட்டுப்பாட்டில் வளர முடிவெடுக்க வேண்டும். இதற்கான நாற்றங்கால்களாகக் கல்விக்கூடங்கள் மாற வேண்டும்.

இவற்றை இன்றிலிருந்தே நாம் செய்யத் தொடங்கினால், வருங்காலத்தில் நாம் விரும்பும் மாற்றங்கள் ஏற்படும். தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் நாம் விரும்பும் மாறுதல்கள் எளிதில் ஏற்படும். ●

## இந்தவார ராசிபலன் 27.04.2025 - 03.05.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 14

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அமாவாசை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை கிடைக்கும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். முன்னேற முயல்வீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். சிலருக்கு வீடு மாற்றம், தொழில் மாற்றம் என வாழ்க்கையில் ஏதேனும் ஒரு மாற்றம் ஏற்படும். தெய்வீக வழிபாடுகள் மனதில் நிம்மதி நிலவும். புதிய தொழில் பயணங்கள் மூலம் எதிர்பார்த்த தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொலைதூரப் பயணங்களால் ஆதாயம் உண்டு.. காற்றடிக்கும் போதே தூற்றி கொள்வது போல், நல்ல இலாபம் வரும் போது சேமித்து வைத்துக் கொள்வது நல்லது. அப்போதுதான், வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் தன்னம்பிக்கை உயரும். பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். சிலருக்குக் கார் போன்ற சொகுசு வாகனங்கள் வாங்கும் உயர்வு நிலை ஏற்படலாம். தெய்வ சிந்தனைகள் மனதில் பூரண அமைதி நிலவும். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்குப் பணி நிரந்தரத்திற்கான ஆணைகள் கிடைத்து, மனதில் இன்ப வெள்ளம் பாயும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் கிடைக்கும் நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்குத் தற் போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் பூர்வ புண்ணியத்தால் குலதெய்வ வழிபாடுகள் சிறக்கும். உறவுகள் வருகையால் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம் என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். பணவரவு அதிகரித்தாலும், பழைய கடன்கள் அல்லது நோய்களால் கவலை ஏற்படும். பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளை திருப்தி படுத்தும் வகையில் செலவுகள் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ் உண்டாகும். தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். அரிய சாதனைகள் புரிவார்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ் வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். தங்கள் உயர் அதிகாரி கள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமத மின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியடை யும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். மாணவர்கள் பாடங்களை அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். புத்திர பாக்கியம் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்ப டலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டு அதில் கிடைக்கும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல்கள் - தேசிய மக்கள் சக்தி - தமிழ்க்கட்சிகள் - மக்களின் மனநிலை



வீரகத்தி தனபாலசிங்கம்

உள்ளூராட்சி தேர்தல்களுக்கு இன்னமும் ஒன்பது தினங்கள் இருக்கின்றன. ஏழு மாதகால இடைவெளியில் மூன்றாவது தேர்தலை எதிர்கொள்வதனால் போலும் மக்கள் மத்தியில் பெரிய உற்சாகத்தைக் காணமுடியவில்லை.

கடந்த வருடத்தைய ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பில் கலந்து கொண்டவர்களை விடவும் குறைவான தொகையினரே பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்தார்கள். உள்ளூராட்சி தேர்தல்களில் மேலும் குறைவான எண்ணிக்கையில் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளக்கூடிய சாத்தியமே இருக்கிறது. மக்களின் மனநிலைக்கு அப்பால் நாட்டின் தற்போதைய மிகவும் கடுமையான வெப்பநிலையும் கூட இதற்கு பெருமளவில் பங்களிப்புச் செய்யக் கூடும்

ஆளும் தேசிய மக்கள் சக்தி மிகுந்த உத்வேகத்துடன் அதன் பிரசாரங்களை முன்னெடுத்து வருகிறது. ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தங்களுக்கு பெற்றுத் தந்ததைப் போன்று உள்ளூராட்சி தேர்தல்களிலும் பெருவெற்றியை தரவேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் அரசாங்க தலைவர்களும் நாட்டு மக்களைக் கேட்கிறார்கள்.

தென்னிலங்கை எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை, கடந்த வருடத்தைய இரு தேசியத் தேர்தல்களிலும் அடைந்த தோல்வி, உள்முரண்பாடுகள் மற்றும் கட்சிக் கட்டமைப்புகளின் குறைபாடுகள் காரணமாக அவற்றின் தேர்தல் பிரசாரங்கள் மிகவும் பலவீனமான நிலையிலேயே இருக்கின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரசாரங்களை தலைமைதாங்கி முன்னெடுக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை அதன் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்ததில் இருந்து அந்த கட்சியின் இன்றைய பரிதாபமான நிலையை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேயவர்தன மற்றும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன போன்ற ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார நெருக்கடி தோன்றும் என்றும் ரணில் விக்கிரமசிங்க மீணடும் ஜனாதிபதியாக ஆட்சியைப் பொறுப்பேற்க வேண்டிய நிலை உருவாகும் என்றும் கதையளந்து கொண்டிருக்கிறார்கள். மூன்று வருடங்களுக்கு முன்னர் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தனியொரு உறுப்பினராக இருந்து கொண்டு ஜனாதிபதியாக வந்த சூழ்நிலையைப் பற்றிய சரியான புரிதல் இல்லாதவர்கள் போன்று ஒருவிதமான மருட்சிக்கு இவர்கள் ஆளாகியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் குறைபாடுகளைப் பற்றி பேசுவதை தவிர, தேர்தல் பிரசாரங்களில் மக்களுக்கு முன்னால் சென்று கூறுவதற்கு உருப்படியாக எதுவும் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சிறிலங்கா சுதந்திர கட்சி போன்ற மற்றைய எதிர்க்கட்சிகளை பற்றி பேசாமல் விடுவதே நல்லது.

எதிர்க்கட்சிகள் இத்தகையதொரு குழப்பமான நிலையில் இருப்பது ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பாக இருக்கின்ற போதிலும், ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும், நடைமுறைச் சாத்தியத்தைப் பற்றி சிறிதேனும் சிந்திக்காமல் அள்ளிவீசிய எண்ணற்ற வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியிருப்பதால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஏமாற்றமும் விரக்தியும் உள்ளூராட்சி தேர்தல்களில் கணிசமானளவுக்கு பிரதிபலிப்பதற்கான சாத்தியங்கள் இருக்கிறது.

புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு ஆட்சியதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அதன் அரசாங்கத்தின் கீழ் நடைபெறுகின்ற முதலாவது தேர்தலில் முன்னெடுக்கின்ற பிரசாரங்களை நோக்கும் போது அதில் முன்னைய அரசாங்கங்கள் நடந்து கொண்ட முறையில் இருந்து எந்த விதமான வேறுபாட்டையும் காணமுடியாமல் இருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பிறகு அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் நான்கு இலட்சம் குடும்பங்களைச் சேர்த்து அஸ்வேசும சமூக நலன்புரித்திட்டம் விரிவாக்கப்படும் என்று ஜனாதிபதி திசாநாயக்க உறுதியளித்திருக்கிறார். ஏற்கெனவே ஊழியர்களால் நிரம்பி வழியும் அரசாங்க சேவைக்கு மேலும் 35 ஆயிரம் பேரைச் சேர்க்கப் போவதாக அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது.

முன்னைய அரசாங்கங்கள் தேர்தல் காலங்களில் மேற்கொண்ட இத்தகைய அதிகாரத் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தாங்கள் மிகவும் கடுமையாகக் கண்டனம் செய்ததை ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) தலைவர்கள் சுலபமாக மறந்து விட்டார்கள் போலும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மற்றைய அரசியல் கட்சிகளின் நிருவாகத்தின் கீழ் வரக்கூடிய உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்வது குறித்து அரசாங்க தலைவர்கள் அதுவும் குறிப்பாக ஜனாதிபதி திசாநாயக்க விடுத்திருக்கும் அச்சுறுத்தல் மிகவும் பாரதூரமான ஒரு சட்டமீறலாகும்.




**சொந்த மண்ணில் தொடர்ந்தும் வாழ்ந்தால் தங்களுக்கும் தங்களது சந்ததிகளுக்கும் நல்ல எதிர்காலம் ஒன்று இருக்கும் என்ற வலுவான நம்பிக்கையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய நடைமுறைச் சாத்தியமான - விவேகமான அரசியல் அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது குறித்து தமிழ் அரசியல்வாதிகள் இனிமேலாவது சிந்திக்க வேண்டும். அதைச் செய்யத்தவறினால், ஏற்படக்கூடிய ஆபத்து தெளிவாகத் தெரிகிறது.**

தேசிய மக்கள் சக்தியின் நிருவாகத்தில் இல்லாத உள்ளூராட்சி சபைகளுக்கான நிதித் தேவைகள் தாமதிக்கப்படும் அல்லது அந்த சபைகளினால் முன்வைக்கப்படும் நிதிக் கோரிக்கைகள் ஒன்றுக்கு பத்து தடவைகள் நுணுக்கமாக பரிசீலிக்கப்படும் என்று கூறிய ஜனாதிபதி திசாநாயக்க ஆளும் கட்சியின் நிருவாகத்தின் கீழ் வரக்கூடிய உள்ளூராட்சி சபைகளின் நிதிக் கோரிக்கைகளை அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு எந்த கேள்வியும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் இந்த பேச்சு உள்ளூராட்சி தேர்தல் ஒழுங்கு விதிகளை அப்பட்டமாக மீறும் செயல் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறையிட்டிருக்கும் எதிரணி அரசியல் கட்சிகளும் தேர்தல் கண்காணிப்பு சிவில் அமைப்புக்களும் இதுவரையில் எட்டு தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவ்வாறு ஜனாதிபதி பேசியதாக சுட்டிக் காட்டியிருக்கின்றன. ஆனால், அவற்றின் முறைப்பாடு குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியான நடவடிக்கையை எடுப்பதில் உண்மையான அக்கறை காட்டியதாக தெரியவில்லை.

இதனிடையே, முன்னைய இரு தேசிய தேர்தல்களிலும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அரசாங்கம் இருக்கும் நிலையில் ஜனாதிபதி திசாநாயக்க தற்போது தேர்தல் பிரசாரங்களில் மேலும் பல வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார்.

கடந்த வருடம் தேர்தல் பிரசாரங்களின்போது ஜனாதிபதி திசாநாயக்க பொருளாதார இடர்பாடுகளை தணிக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முழு நாட்டு மக்களுக்கும் அளித்த வாக்குறுதிக்கு புறம்பாக, இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் பொதுமக்களின் காணிகள் திருப்பி கையளிக்கப்படுவதுடன் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் பயங்கரவாத தடைச்சட்டம் இரத்துச் செய்யப்படும் என்றும் தமிழ் மக்களுக்கு உறுதியளித்தார். அவரின் கடந்த ஏழு மாதகால ஆட்சியில் அந்த வாக்குறுதிகளுக்கு நேர்ந்திருக்கும் கதி என்னவென்று எல்லோருக்கும் தெரியும்.

இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் சர்ச்சைக்குரியதாக விளங்கும் தையிட்டி பௌத்த விகாரை பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் கூறிய யோசனை அந்த பிரச்சினையை அவர் ஒழுங்கான முறையில் கையாளுவதற்கு அவர் தயாராக இல்லை என்பதை தெளிவாக வெளிக்காட்டுகிறது.

தையிட்டி விகாரை பிரச்சினையை பயன்படுத்தி வடக்கிலும் தெற்கிலும் முன்னெடுக்கப்படும் இனவாத அரசியலை சம்பந்தப்பட்டவர்கள் கைவிட்டால், அந்த விகாரையின் பௌத்த மதகுரு அந்த பகுதி காணிகளின் உரிமையாளர்களுடன் சுமுகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்று வடக்கிற்கு தேர்தல் பிரசாரத்துக்கு வந்த திசாநாயக்க கூறினார்.

மக்களுக்கு சொந்தமான காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் அந்த விகாரையை அகற்றக்கோரி போராட்டம் நடத்துகின்ற தமிழ் அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் நிலைப்பாட்டையும் அதே விகாரையை அகற்றக் கூடாது என்று தென்னிலங்கையில் குரலெழுப்பும் கடும்போக்கு தேசியவாத சக்திகளின் நிலைப்பாட்டுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஜனாதிபதி முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். இரு நிலைப்பாடுகளையும் சமாந்தரமான இனவாதம் என்று அவர் அடையாளப்படுத்துவது உண்மையில் தவறு.

தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராடும் அரசியல் கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள் அதை இடிக்க வேண்டும் என்று அண்மைக் காலங்களில் மக்களின் உணர்ச்சிகளை தூண்டும் வகையில் பேசினார்கள். அவ்வாறாக விகாரையை இடிப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய எந்தவொரு விபரீதமான முயற்சியினாலும் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளில் இருந்து தமிழ் மக்களை பாதுகாக்கக்கூடிய எந்த ஆற்றலும் இல்லாத தமிழ் அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற பேச்சுக்களை வடபகுதி மக்களே வெறுத்தார்கள். அது வேறு விடயம்.

ஆனால், கடந்தகால ஆட்சியாளர்களைப் போலன்றி முற்றிலும் வேறுபட்ட ஆட்சியாளராக தன்னைக் காட்டிக் கொள்ளும் ஜனாதிபதி தமிழ்ப் பகுதிகளின் கலாச்சார தனித்துவத்தையும் குடிப்பரம்பலையும் மாற்றியமைக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் இனவாத, மதவாத நடவடிக்கைகள் தொடர்பிலும் தன்னை வேறுபட்டவராகக் காட்டிக்கொள்ள முன்வந்திருக்க வேண்டும்.

தையிட்டி விகாரை தங்களது ஆட்சிக் காலத்தில் அமைக்கப்படவில்லை என்பதை ஒத்துக் கொண்டு அதேவேளை முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுவிட்ட அந்த விகாரையை அகற்றுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை வடக்கு மக்களுக்கு ஜனாதிபதி விளக்கிக் கூறியிருக்கலாம். பாதிக்கப்பட்ட மக்களிடம் வருத்தத்தை தெரிவிப்பதுடன் அவர்களுக்கு மாற்றுக் காணிகளும் இழப்பீடும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இனிமேல் தமிழ்ப் பகுதிகளில் சட்டவிரோதமாக பௌத்த விகாரைகளோ அல்லது வேறு மதத்தலங்களோ நிருமாணிக்கப்படுவதற்கு தனது அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என்றும் ஜனாதிபதி கூறியிருந்தால் அவர் உரத்துப் பேசும் புதிய அரசியல் கலாசாரத்துக்கு ஏதாவது அர்த்தம் இருந்திருக்கும். ஆனால், அவ்வாறு செய்யக்கூடிய அரசியல் துணிச்சல் அவரிடம் இருக்கவில்லை.

பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்ததைப் போன்று வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் உள்ளூராட்சி தேர்தல்களில் வாக்களிக்கக்கூடிய சாத்தியம் பெரும்பாலும் இருக்காது. தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கடந்த ஏழு மாதகாலமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடைப்பிடித்துவரும் அணுகுமுறைகளை வடக்கில் மக்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் நிச்சயமாக பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இனவாதமும் மதத்தீவிரவாதமும் மீண்டும் தலையெடுப்பதற்கு இனிமேல் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று அரசாங்க தலைவர்கள் செய்துவரும் பிரகடனங்கள் மாத்திரம் நாட்டில் இனவாதத்தை ஒழித்துவிடப்போவதில்லை. கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக இனவாத அரசியல் தோற்றுவித்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் அரசியல் துணிச்சலை வெளிக்காட்ட வேண்டியது முக்கியமானதாகும். இனவாதத்தின் கைதிகளாக இருக்கும் நிலையில் இருந்து ஜனாதிபதியும்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துறையைத் தவிர ஏனைய சகல துறைகளையும் கையாளும் அரசாங்கம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

அரசாங்கத்தின் மிகவும் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் தெரிவித்த ஒரு கருத்து ஊகத்துக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகிறது. முன்னாள் ஜனாதிபதி தற்போதைய சர்வதேச பொருளாதார ஒழுங்கு மற்றும் நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்கள் குறித்து சிறந்த விளக்கப்பாட்டை கொண்டிருப்பவர் என்று அமைச்சர் லால் காந்த கூறியிருக்கிறார்.

நவதாராளவாதத்தில் வேர்விட்ட தனித்துவமான உலகப்பார்வை ஒன்று முன்னாள் ஜனாதிபதிக்கு இருக்கிறது என்றும் அந்த பார்வையே அவரது அணுகுமுறையை தொடர்ந்தும் வடிவமைக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். 'நாம் இப்போது காண்பது நவதாராளவாதத்தை நோக்கிய நகரவேயாகும். ரணில்தான் நவதாராளவாதத்தை இலங்கையில் வெளிப்படையாக அரவணைத்த முதல் அரசியல்வாதி. அவரே இந்த பகுதியில் மிகவும் அறிவுடைய ஒரு முக்கியஸ்தர்" என்று லால்காந்த கூறியதாக மேற்கோள் காட்டப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியையும் 2022 ஆம் ஆண்டில் நாடு வீழ்ந்த பொருளாதாரப் பாதாளத்தில் இருந்து அதை மீட்டெடுப்பதற்கு செய்யவேண்டியவை தொடர்பில் அவருக்கு இருந்த விளக்கப்பாட்டையும் அமைச்சர் லால் காந்த மெச்சியிருப்பது சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிப்பதை நியாப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் ஒரு செயலாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை சமநிலையற்றதாகவும் சனத்தொகையின் வறிய பிரிவினர் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருப்பதால் அதை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த வேண்டியது அவசியம் என்பதே தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்துக்கு கொண்டுவந்த தேர்தல்களுக்கு முன்னதாக அதன் நிலைப்பாடாக இருந்தது. அந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை முறிவடையக் கூடிய சாத்தியப்பாட்டுக்கு வழிவகுக்கும் என்றும் மீண்டும் பொருளாதார உறுதிபாடின்மை ஏற்படும் என்றும் அஞ்சப்பட்டது. ஆனால், அவ்வாறு நேரவில்லை. முன்னாள் ஜனாதிபதியின் வழியில் மேலும் முன்னோக்கிச் செல்வதற்கு அரசாங்கம் சிந்திக்கிறது போன்று இப்போது தெரிகிறது.

முன்னாள் ஜனாதிபதியை பாராட்டி கருத்துக்களை தெரிவித்த அதே நிகழ்வில் அமைச்சர் லால்காந்த, அரசாங்கத் துறையில் செயற்திறனின்மையும் அளவுக்கு அதிகமான ஊழியர்களின் தொகையும் இருப்பதாகவும் கவலை தெரிவித்ததாக செய்தி அறிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஊழலையும் செயற்திறனின்மையையும் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் பற்றி குறிப்பிட்ட அவர், இந்த பிரச்சினைகளை கையாளுவதில் தற்போதைய அரசியல் தலைமைத்துவம் கொண்டிருக்கும் பற்றுறுதியை பாராட்டினார். ஆனால் அரசாங்கத் துறையில் சீர்திருத்தங்கள் இன்னமும் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

முறைமையை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கும் உயர்மட்டப் பதவிகளுக்கு அரசாங்க உயரதிகாரிகள் பணிக்குழுவுக்கு வெளியில் இருந்து ஆட்களை நியமனம் செய்வதற்கும் எதிர்ப்பு இருக்கிறது என்று செய்திகள் வருகின்றன.

'ஜனாதிபதி முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை ஊழலை அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது. ஆனால், அரசாங்கத்துறை சீர்திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும். நாம் மெதுமெதுவாக ஆனால், சீரானமுறையில் படிப்படியாக முறைமையை மாற்றுவோம்' என்று அமைச்சர் தனதுரையில் கூறிமுடித்தார். செயற்திறனற்ற அரசாங்கத்துறையின் பிரச்சினைகளை கையாளுவதற்கு பரந்தளவிலான கலந்தாலோசனையுடன் விரிவான செயன் முறையையும் வீதிவரைபடத்தையும் அரசாங்கம் வகுக்கவேண்டும். எந்த நாடுமே அதன் அரசாங்க சேவைக்கு அப்பால் எழுச்சிபெறமுடியாது.

தோற்கடிக்கப்பட்ட எதிரியின் பலத்தையும் ஆற்றல்களையும் மெச்சுவதற்கு ஒருவருக்கு இருக்கும் ஆற்றல் அவரின் பலத்தின் அறிகுறியே அன்றி பலவீனத்தின் ஒப்புதலாகவோ அல்லது உதவிக்கு வருமாறு மறைமுகமாக விடுக்கப்படும் வேண்டுகோளாகவோ அமைந்துவிடாது. இந்த கோணத்தில் நோக்கும்போது அமைச்சர் லால்காந்த முன்னாள் ஜனாதிபதிக்கு தெரிவித்த பாராட்டை தற்போது சென்றுகொண்டிருக்கும் பாதையின் வெற்றியில் தேசிய அரசாங்கத்துக்கு இருக்கும் நம்பிக்கையின் ஒரு அறிகுறியாக பார்க்கமுடியும்.

தேர்தல்களில் வெற்றி பெற்றபிறகு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனும் ஏனைய சர்வதேச கடன் வழங்குனர்களுடனும் நல்லதொரு செயற்பாட்டு உறவுமுறையை நோக்கி விரைவாகவே நகர்ந்திருக்கிறது. விரிவுபடுத்தப்பட்ட கடனுதவித் திட்டத்தின் நான்காவது மீளாய்வுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக வாஷிங்டனுக்கு சென்றிருக்கும் அரசாங்கத் தூதுக்குழு இலங்கை மீதான ட்ரம்பின் வரிவிதிப்பின் தாக்கம் குறித்து ஆராய்வதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல்களை நடத்ததுவது முக்கியமானதாகும். இது தற்போது காணமுடியாமல் இருக்கும் பன்முகத்தன்மை மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை அரசாங்க முறைமைக்குள் கொண்டுவர உதவும். அவ்வாறு செய்வது நீண்டகால அடிப்படையில் தேசிய வெற்றிக்கு மிகவும் அவசியமானதாகும்.**





முன்னைய அரசாங்கம் இணங்கிக்கொண்டதை போன்று பெரியளவில் அரசசொத்துக்களை தனியார்மயமாக்குவதில் ஈடுபடாமல் இருப்பதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தும் செயலில் அரசாங்கம் மறைமுகமாக ஈடுபட்டிருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது. சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் மற்றும் நஷ்டத்தில் இயங்குகின்ற கூட்டுத்தாபனங்கள் போன்ற அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு அரசாங்கங்கள் பாரியளவு நிதியைச் செலவிட்டன. முற்றிலும் தவறான முகாமைத்துவமும் பெருமளவிலான ஊழலும் காரணமாக இந்த நிறுவனங்கள் இலாபகரமான முறையில் நடத்தப்படவில்லை. இவற்றை தனியார்மயமாக்க வேண்டிய தேவை குறித்து குறிப்பிட்டபோது அமைச்சர் லால்காந்த இந்த குறைபாடுகளையே காரணமாகக் குறிப்பிட்டார்.

ஆனால், சொத்துக்கள் நிறைந்த (காணிகள், உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்) அரச நிறுவனங்களின் தனியார்மயமாக்கல் கடந்த காலத்தில் அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்திய ஊழல்தனமான அரசியல்வாதிகளுக்கு ஒரு தங்கச்சுரங்கமாக இருந்திருக்கும். தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அரசாங்க - தனியார் கூட்டுப்பங்காண்மையில் ஈடுபட்டுள்ள அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு அதே கதி ஏற்படாது என்று நம்புவதற்கு காரணங்கள் இருக்கின்றன. அமைச்சர் லால்காந்த உறுதிப்படுத்தியதைப் போன்று ஊழலை தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க இன்று ஒரு அரசாங்கம் இருக்கிறது. தற்போதைய அரசாங்கத்தின் உயர் அரசியல் மட்டத்தில் சிறிதளவேனும் ஊழல் இல்லாமல் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

சனத்தொகையின் மிகவும் வறிய பிரிவினர் மீது பெருளவுக்கு அக்கறை காட்டுவதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்கு அந்த பிரிவினருக்கு உதவக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அரசாங்கம் மறைமுகமாக சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தியிருக்கிறது என்று தெரிகிறது. வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு அஸ்வேசும செயற்திட்டம் மூலமாக வழங்கப்படுகின்ற நேரடி உதவிகள் மூன்று மடங்காக அதிகரிக்கப்படுகிறது. அவர்களுக்கு உதவும் வேறு திட்டங்களுக்கும் பெருமளவு வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

சுகாதாரத்துறைக்கும் கல்வித்துறைக்கும் பெருமளவு வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதன் மூலமும் மறைமுகமான மீள்பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. இது முன்னைய அரசாங்கத்தின் போக்கில் இருந்து வேறுபடுகிறது. முன்னைய அரசாங்கத்தின் கீழ் பொதுச் சுகாதாரத் துறைக்கும் பொதுக் கல்வித்துறைக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் வளங்களை குறைப்பதற்கும் நஷ்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்களை நிருவகிப்பதற்கு தனியார் துறைக்கு கூடுதல் வாய்ப்புக்களை வழங்குவதற்கும் திட்டங்கள் இருந்தன.

அரசாங்கம் அதற்கு அனுகூலமான ஒரு சூழ்நிலையிலேயே எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல்களைச் சந்திக்கும் என்று தோன்றுகிறது. தற்போது முடிவடைந்த பாரம்பரிய புத்தாண்டு நாட்களில் வீதியோர விற்பனை நிலையங்களில் மக்களின் நுகர்வு மட்டம் - முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது - முன்னென்றும் இல்லாத வகையில் காணப்பட்டது.

தேர்தல் நோக்கங்களுக்காகவே கண்டி தலதா மாளிகையில் புத்தரின் புனித தந்தத்தை அரசாங்கம் மக்களின் தரிசனத்துக்கு வைத்திருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டினாலும் கூட, அரசாங்கத்தின் அந்த நடவடிக்கை பொதுமக்களினால் பெரிதும் வரவேற்கப்படுகிறது. புனித தந்தத்தை தரிசிப்பதற்காக மணிக்கணக்காக நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் மக்கள் அந்த வாய்ப்பை வழங்கியதற்காக ஆனந்தக்கண்ணீருடன் அரசாங்கத்துக்கு நன்றி கூறுகிறார்கள். இது கலாசாரத்துடனான மக்களின் நெருக்கமான பிணைப்பை வெளிக்காட்டுகிறது.

இதற்கு மேலதிகமாக, ஊழலிலும் குற்றச்செயல்களிலும் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை கிடைக்கச் செய்வதாக நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியையும் நிறைவேற்றுவதில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது. பல முக்கியமான புள்ளிகள் ஏற்கெனவே பிடிபட்டிருக்கிறார்கள். சுயாதீனமான இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீண்டும் துடிப்புடன் இயங்க வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தைப் போலன்றி தற்போது அரசாங்கத்திடம் அரசியல் துணிவாற்றல் இருக்கிறது. அதற்கு சட்டத்தின் ஆட்சியின் ஆதரவும் இருக்கிறது. ஊழலிலும் குற்றச்செயல்களிலும் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்படுகின்றன.

முன்னைய அரசாங்கங்கள் நம்பகத்தன்மை வாய்ந்த முறையில் விசாரணை செய்யத்தவறிய சர்ச்சைக்குரிய 2019 ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக இப்போது அரசியல் துணிவாற்றலுடன் மீண்டும் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. சட்டத்தின் ஆட்சி முறையாக நடைபெறுகிறது. இதையடுத்து முக்கியமான அரசியல் பிரமுகர்கள் விசித்திரமான முறையில் பிரதிபலிப்புக்களை வெளிக்காட்டி நடந்து கொள்வதை காணக்கூடியதாக இருக்கிறது. அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு வழிவகுத்த பாவச்செயலின் பின்னணியில் இருந்தவர்கள் அம்பலப்படுத்தப்படக்கூடியதாக நிலைவரங்களில் வரவேற்கத்தக்க மாற்றம் ஏற்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினையிலும் உண்மையை தேடுவதில் இதே உறுதிப்பாடு அரசாங்கத்திடமிருந்து வெளிப்படவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டுவந்த கடந்த வருடத்தைய தேர்தல்களில் நாட்டின் சகல பாகங்களிலும் அதற்கு வெற்றி கிடைத்தது. நாடு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து முக்கியமான பிரச்சினையாக இருந்துவரும் இனங்களுக்கு இடையிலான துருவமயமாதலை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது கடந்த வருடத்தைய தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்தது முன்னென்றும் இல்லாத ஒரு வெற்றியாகும். இன்னமும் இரு வாரங்களால் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களிலும் அதேபோன்ற வெற்றி தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், அதேவேளை அரசாங்கத்திலும் அதன் தெரிவுகளிலும் நாட்டின் இன, மத மற்றும் அரசியல் பல்வகைமை பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். இது விடயத்தில் நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல்களை நடத்ததுவது முக்கியமானதாகும். இது தற்போது காணமுடியாமல் இருக்கும் பன்முகத்தன்மை மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை அரசாங்க முறைமைக்குள் கொண்டுவர உதவும். அவ்வாறு செய்வது நீண்டகால அடிப்படையில் தேசிய வெற்றிக்கு மிகவும் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த சிங்கள கட்சிகள் இரண்டும் காணாமலாக்கப்பட்ட வரலாறு தமிழரசு கட்சிக்கு ஒரு பாடம்!

பனங்காட்டான்

இலங்கையின் சட்ட மாஅதிபர் திணைக்களமும் நீதிமன்றமும் எடுத்த முடிவுகளின் பிரகாரம் அடுத்த மாதம் 6ம் திகதி உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. சட்டமும் நீதியும் சேர்ந்து தேர்தல் திணைக்களத்தின் சிக்கலை ஒருவாறு தீர்த்து வைத்துள்ளன.

28 மாநகர சபைகள், 36 பட்டின சபைகள், 275 பிரதேச சபைகள் என 341 உள்ளூராட்சிச் சபைகள் இங்குள்ளன. இவற்றுள் 339 சபைகளுக்கே தேர்தல் நடைபெறவுள்ளது. 17,296,330 பேர் இத்தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

2018ல் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில் ராஜபக்சக்களின் பொது ஜன பெரமுன நாடளாவிய ரீதியில் 40 சதவீத வாக்குகளை பெற்றது. இதனை மூலாதாரமாகக் கொண்டு 2019ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோதபாய வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து 2022ல் இடம்பெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நிதியின்மை காரணமாக கோதபாய ஆட்சியில் ஒரு வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதன் அடுத்த கட்டமாக 2023 மார்ச் 9ம் திகதி தேர்தலை நடத்த ஆணையம் தீர்மானித்தது. நிதியின்மை காரணமாக தேர்தல் மீண்டும் பின்போடப்பட்டது. 2023 பெப்ரவரி 14ல் இடம்பெற வேண்டிய தேர்தல் ஏப்ரல் 25ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து இழுபறியால் தேர்தல் பின்போடப்பட்டு இப்போது மே மாதம் 6ம் திகதிக்கு நடத்தப்படுகிறது.

ஜனநாயக சோசலிஷ குடியரசு எனப் பெயர் கொண்ட இலங்கையில் உள்ளூர் நிர்வாகத்தை மேற்கொள்ளும் அடிமட்ட அரசியல் சபைகளுக்கான தேர்தல் கோதபாய, ரணில் விக்கிரமசிங்க ஆகிய இரண்டு ஜனாதிபதிகளின் காலத்தைத் தாண்டி, அநுர குமர ஜனாதிபதியாக இருக்கும் வேளையில் இடம்பெறுவது சரித்திரப் பாட நூலுக்கு தனியான ஓர் அத்தியாயம்.

இதிலுள்ள முக்கிய சிறப்பம்சமாகக் காணப்படுவது, ஒரு வருட காலத்தில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் என்பவை ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெறுவது. கடந்த வருடம் செப்டம்பர் 21ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி கடந்த நவம்பர் 14ம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று கிடைத்த வெற்றியின் சூடு இறங்குவதற்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுகிறது.

நாடு பூராவும் பெருமளவான சபைகளை இலகுவாக வென்று விடலாமென்று நம்பிக்கை எதிர்பார்ப்பே இவர்களின் தேர்தல் பரப்புரைகளில் காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்களிலிருந்து அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி ஆக அனைவருமே களத்தில் இறங்கியுள்ளனர். கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிட்டது போன்று பிரதமர், ஜனாதிபதி போன்ற உயர் பதவிகளில் இருப்பவர்கள் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றில் தங்கள் கட்சிக்காக வாக்குக் கேட்டு நாட்டின் மூலைமுடுக்கெங்கும் செல்வது இதுவே வரலாற்றில் முதன்முறையாகும்.

இதில் மிக முக்கியமாகக் காணப்படும் இன்னொரு அம்சம், தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளை எவ்வாறு தமிழ் கட்சிகளிடமிருந்து பறித்து விடலாமென்ற கூரிய இலக்குடன் தேசிய மக்கள் சக்தி வாக்கு வேட்டை நடத்துவதுதான்.

தமிழ் பிரதேசங்களிலுள்ள வாக்குகளை எண்ணி எடுக்காமல் கொள்ளையாக அள்ளி எடுக்க எல்லா வகை முறைகளையும் இவர்கள் பயன்படுத்துகின்றனர். இதற்காக பொய்களைக் கூறுவதிலும் இவர்கள் தயங்கவில்லை.

> **தென்னிலங்கையின் மூத்த அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சிறீலங்கா சுதந்திர கட்சியும் எவ்வாறு அவர்களது மக்களாலேயே ஒதுக்கப்பட்டனவோ அதே நிலைமை 75 வருட வரலாற்றைக் கொண்ட தமிழரசுக் கட்சிக்கு வந்துவிடக்கூடும் போல் தெரிகிறது. தெற்கின் வரலாற்றை இவர்கள் ஒரு பாடமாக எப்போது எடுத்துக் கொள்வர்?**










யாழ்ப்பாணத்திலுள்ள வல்வெட்டித்துறையில் ஒரு கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமர உரையாற்றினார். விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறப்பிடம் என்பதால் இக்கூட்டத்துக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதனால் இதனை பிரமாண்டமான கூட்டமாக மாற்றியமைத்தனர். இங்கு உரையாற்றும் போது, மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் காங்கேசன்துறையில் கட்டப்பட்டு, இன்னமும் பாவனைக்கு உட்படுத்தப்படாதிருக்கும் மாளிகை பற்றி அநுர குமர குறிப்பிட்டார்.

பல கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த மாளிகை தமக்கு வேண்டாமென்று கூறிய இவர், உங்களுக்கு வேண்டுமா என்று மக்களைப் பார்த்து ஒரு தடவைக்கு மேலாக கேட்டார். மக்கள் ஓம் என்று உரத்துத் தெரிவித்தனர். நல்லது என்று தமிழில் தெரிவித்த அநுர குமர, கமலஹாசனின் தசாவதாரம் படத்தை குறிப்பிட்டு மகிந்த ராஜபக்ச நாட்டின் பல பாகங்களிலும் மாளிகைகளைக் கட்டி அழகு பார்த்தார் என்றும் கூறி மக்களின் கைதட்டைப் பெற்றார்.

இது நடைபெற்று ஐந்து மாதங்கள் ஆகிவிட்டது. காங்கேசன்துறை மாளிகை அப்படியே கிடக்கிறது. அதனை பல்வேறு பொதுத்தேவைகளுக்கு வழங்குமாறு இந்து மாமன்றத்தின் சார்பில் கலாநிதி ஆறு திருமுருகன் பகிரங்க வேண்டுகோள் விடுத்ததற்கும் எந்தப் பதிலும் இல்லை.

ஆனால், இப்போது உள்ளூராட்சித் தேர்தல் காலம் என்பதால் அரசாங்க அதிகாரிகள் குழுவொன்று மாளிகைக்குச் சென்று அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பரிசீலிப்பதாக ஊடகங்களில் படம் காட்டப்படுகிறது. அடுத்த வருடம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலின்போதும் இந்த மாளிகை தமிழரின் வாக்குகளுக்காக பேசு பொருளாக்கப்படுமெனவும் இது ஒரு தொடர்கதையாகவே இருக்குமெனவும் நம்பலாம்.

அடுத்தது, காணாமலாக்கப்பட்டோரின் அன்னையர் நீண்டகாலமாக நடத்தி வரும் பெரும் போராட்டம் சம்பந்தமானது. இவர்கள் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுமென்று தேர்தல் காலங்களில் அநுர குமரவினாலும், அவரது கட்சியினராலும் உறுதியளிக்கப்பட்டது. இதுவரை எதுவுமே இடம்பெறவில்லை (இது எதிர்பார்க்கப்பட்டதுவே).

தமிழர் பகுதி தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றும்போது, தமது சகோதரர் ஒருவரும் (ஜே.வி.பி. போராட்ட காலத்தில்) காணாமலாக்கப்பட்டவர் என்றும், அதனால் இதன் வலி தமக்குத் தெரியுமென்றும் கூறி தமிழ் மக்களை முக்கியமாக அன்னையரை அநுர குமர நம்ப வைத்தார். கடந்த வாரம் வவுனியாவில் தேர்தல் கூட்டமொன்றுக்கு இவர் செல்வதற்கு இவரது பாதுகாப்புக்காக மக்கள் ஆர்ப்பாட்டத்தை தடை செய்யுமாறு பொலிசார் நீதிமன்றத்தில் உத்தரவு கேட்டனர்.

காணாமலாக்கப்பட்டோர் அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தி அமைதிக்கு பங்கம் விளைவிப்பர் என்று பொலிசார் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டம் மக்களின் ஜனநாயக உரிமை என்று கூறிய நீதிமன்றம் தடையுத்தரவை மறுத்துத் தீர்ப்பளித்தது. அநுர குமர நாட்டின் பாதுகாப்பு அமைச்சரும் கூட. இவரால் இவ்வகையான ஆர்ப்பாட்டங்களுக்கு தடை விதிக்க வேண்டாமென பொலிசாருக்கு உத்தரவிட முடியும். ஆனால், நீதிமன்றம் அதனை எதிர்பார்க்காது சட்டத்தை நடைமுறைப்படுத்தியது. ஆட்சிக் கதிரையில் இருப்பவர்களுக்கு பேச்சு மட்டும் பல்லக்கு.

தேர்தல் வேளையில் இவரது அமைச்சர்கள் தமிழர் பகுதிக்கு விஜயம் செய்து என்ன சொல்கிறார்கள்? மண்டைதீவு கிரிக்கட் திடல் அமைக்க நிலம் பார்க்கிறார் ஒருவர். கட்டி முடிக்கப்படாது ஆண்டுக் கணக்கில் அரைகுறையாகவிருக்கும் யாழ்ப்பாண மாநகரசபை கட்டிடத்தை அதிகாரிகள் சகிதம் பார்வையிடுகிறார் இன்னொருவர். ஆனையிறவு உப்பில் நீங்கள் பார்ப்பது பெயரா, ருசியா (சுவை) என்று கேட்கிறார் மற்றொருவர். பொது மக்கள் குடியேற்றம் பற்றி அரசாங்க செயலகத்தில் கூட்டம் நடத்துகிறார் அடுத்தவர் ஒருவர். தமிழரின் வாக்குகளை சுருட்டுவதற்கு தேர்தலை இவர்கள் பயன்படுத்தும் விதம் இப்படி உள்ளது.

இவ்வாறு அமைச்சர்கள் தமிழர் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றுவதற்கு வாய்ப்பாக இருப்பது தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் பிளவுபட்டு பிரிந்து நின்று அடிபடுவதுதான். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தங்கள் இருப்பை தாங்கள் எவ்வாறு இழந்தோம் என்பதை இவர்கள் சிந்திப்பதில்லைப் போலும். நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும், ஒரே குரலில் உரிமைகளைக் கோர வேண்டுமென்று இவர்கள் கேட்பதும்கூட தேர்தலுக்கான மாயாஜாலம்தான்.

கடந்த பொதுத்தேர்தலில் மோசமாக அடி வாங்கியது தமிழரசுக் கட்சி. சுமந்திரனும், சிறீதரனுமே இதற்கான காரண கர்த்தாக்கள். இருவரையும் ஒரு மேடையில் ஏற்ற கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் எடுத்த முயற்சி இதுவரை பயனளிக்கவில்லை.

நல்லாட்சிக் காலத்தில் தமிழரசுக் கட்சியின் பூரண நல்லாசியுடன் உருவாக்கப்பட்ட ஏக்கியராஜ்ய அரசமைப்பை பரிசீலிக்கப் போவதாக அநுர குமர சொல்கிறார். அதற்கு ஆதரவாகவே தேர்தல் காலத்தில் சுமந்திரனும் கூறியிருந்தார். ஆனால், அதனை தாங்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லையென சி.வி.கே.சிவஞானம் இப்போது சொல்கிறார். இதனை சுமந்திரன் அல்லவா சொல்ல வேண்டும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் புதிதாக உருவாகிய தமிழ் மக்கள் பேரவைக்கு ஆதரவு அதிகரித்து வருவது தெரிகிறது. யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் ஒன்றியம் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளது. தேர்தலின் பின்னர் சபைகளை அமைக்க தேவைப்படுமாயின் பேரவையுடன் இணைய தயார் என்று ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். தமிழரசு கட்சியின் முன்னாள் எம்.பி.சரவணபவானும் கஜேந்திரகுமாரின் பேரவைக்கு ஆதரவு வெளியிட்டுள்ளார். இப்போது உள்ள நிலைமையை பார்க்கையில் அநுர குமர அணியினரை கையாளக்கூடியவர்களாக தமிழ் மக்கள் பேரவையினர் காணப்படுகின்றனர்.

தென்னிலங்கையின் மூத்த அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சிறீலங்கா சுதந்திர கட்சியும் எவ்வாறு அவர்களது மக்களாலேயே ஒதுக்கப்பட்டனவோ அதே நிலைமை 75 வருட வரலாற்றைக் கொண்ட தமிழரசுக் கட்சிக்கு வந்துவிடக்கூடும் போல் தெரிகிறது. தெற்கின் வரலாற்றை இவர்கள் ஒரு பாடமாக எப்போது எடுத்துக் கொள்வர்? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# முதுமையில் இளமை சாத்தியமா?



கேணல் ஆர் ஹரிஹரன்

உலகெங்கும் மக்களின் ஆயுட்காலம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதன் தாக்கத்தால் மக்கள் தொகையில் முதியோர்கள் விகிதம் அதிரிக்கவே ஜப்பான், தென் கொரியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் சுகாதாரமும் சமூக வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளன.

முதுமை என்பது நம் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு சிக்கலான பருவம். உலக அளவில் முதுமையின் தாக்கத்தை எதிர் கொள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு 2021ல் இருந்து 2030 ஆண்டு வரை "ஆரோக்கியமான முதுமைப் பத்தாண்டு" என்று அறிவித்தது. ஏற்கனவே அந்த முதுமை பத்தாண்டில் நாம் பாதியை கழித்துள்ளோம்.

கடந்த ஐந்தாண்டுகளில் உலகப் பார்வையை முதுமையின் நீண்டகால தாக்கத்தை சந்திக்க சுகாதார அமைப்புகள் மட்டுமல்லாமல், பொருளாதார நிலை, சமூகப் பாதுகாப்பு மற்றும் மக்களிடையே முதுமையப் பற்றிய கல்வி ஆகிய பிற அம்சங்களின் பால் திரும்பி இருக்கிறது.

இதை தொடர்ந்து, பல நாடுகளில், விஞ்ஞானிகள் தொடர்ந்து மூப்பினால் உடலில் ஏற்படும் தாக்கத்தை குறைக்கவும், அதே வேளையில் வயதான காலத்தில் ஏற்படும் நோய்களின் பாதிப்பை குறைப்பதிலும் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் நான் "ஸைன்டிஃபிக் அமெரிக்கன்" (**Scientific American**) வலை தளத்தில் படித்த டேவிட் ஃப்ரீட்மென் என்பவர் முதுமையின தாக்கத்தை பற்றி எழுதியிருந்த கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. அந்த கட்டுரை "வயதான காலத்தில் நீடித்த ஆரோக்கியமான வாழ்க்கை" என்ற தலைப்பில், எண்பது வயதை எப்போதோ கடந்த விட்ட என்னை ஒத்த வயதானவர்கள் தொடர்ந்து எப்படி ஆரோக்கியமாக வாழ முடியும் என்பதை ஆய்கிறது. முதுமை பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என்பதை அந்தக் கட்டுரை விவரித்திருந்தது.

ஏற்கனவே, ஆராய்ச்சியாளர்கள், புழுக்களின் ஆயுளை பத்து மடங்கு வரை நீட்டிக்கும் வழி முறையை கண்டு பிடித்துள்ளனர். எலிகளுக்கு கூடுதலாக 50 சதவீத ஆரோக்கியமான நீண்ட ஆயுளை எவ்வாறு வழங்குவது என்பதையும் அவர்கள் கற்றுக் கொண்டுள்ளனர். மேலும், நமது செல்லப்பிராணிகளை, முக்கியமாக நாய்களின் ஆரோக்கியமான ஆயுளை நீட்டிக்கும் வழி முறைகள் இப்போது சோதிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் 90 வயதை கடந்தவர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடியுமா என்ற கேள்விக்கு இது வரை முழு விடை காணவில்லை என்றே தோன்றுகிறது. வயதானதால் ஏற்படும் பல்வேறு குறைபாடுகளை அறிவியல் உதவி கொண்டு தாமதப்படுத்தக்கூடும் என்று ஆராய்ச்சியாளர் பலர் நம்புகிறார்கள்.

விலங்குகளில் மூப்பின் தாக்கத்தை குறைக்கும் மருந்துகள் மனிதர்களுக்கும் பாதுகாப்பாக அதே நன்மைகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால், அதற்கான மருத்துவ பரிசோதனைகளை செய்வதில் பல ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள அலபாமா பல்கலைக்கழகத்தில் அமெரிக்க வயதான ஆராய்ச்சி கூட்டமைப்பின் அறிவியல் இயக்குனராக உள்ள ஸ்டீவ் ஆஸ்டாட் இந்த ஆராய்ச்சியில் கடந்த 30 ஆண்டுகளில் காணாத உற்சாகத்தை, தற்போது காண்பதாக கூறியுள்ளார்.

மூப்பின் தாக்கத்தை குறைத்து ஆரோக்கியமான ஆண்டுகளை நீட்டிக்க தேவையான மருந்துகளுக்காக நாம் பல தசாப்தங்களாக காத்திருக்க வேண்டியதில்லை. ஏற்கனவே, 70 வயதைத் தாண்டிய மக்களை கூர்மையாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்க உதவ தனிப்பட்ட சுகாதாரத் தரவுகளை சேகரித்து பட்டியலிடுவதற்கான வழிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து வருகின்றனர்.

'நீங்கள் 90 வயதைத் தாண்டி மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் வலுவாக இருக்க முடியும் என்ற கருத்து முற்றிலும் யதார்த்தமானது' என்று கலிபோர்னியா தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் மரபணுவியல் புரட்சிக்கு முன்னோடியாக உதவிய லெராய் ஹூட் கூறுகிறார். எண்பத்தி ஆறு வயதான ஹூட், தற்போது உடல்நலம் தொடர்பான ஃபீனோம் ஹெல்த்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், இன்ஸ்டிடியூட் ஃபார் சிஸ்டம்ஸ் பயாலஜியின் இணை நிறுவனராகவும் உள்ளார்.



மூப்பின் தாக்கத்தை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சி, மக்களின் வாழ்க்கையில் ஆண்டுகளைச் சேர்ப்பதில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை. அதற்கு மாறாக, அந்த கூடுதல் ஆண்டுகளை ஆரோக்கியமானதாக மாற்றுவதிலும் கவனம் செலுத்துகிறது. கடந்த நூற்றாண்டுக்கும் மேலாக, மருத்துவ அறிவியல் முன்னேற்றங்கள் உலகம் முழுவதும் சராசரி ஆயுட்காலத்தை அதிகரிக்க உதவியுள்ளன.

ஆனால், மக்கள் நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்கும் சராசரி ஆண்டுகளின் எண்ணிக்கை, அவர்களின் ஆயுட்காலம் போல வேகமாக வளரவில்லை.

அந்த இடைவெளியைக் குறைக்க, வயதான அறிவியல் ஆயுட்காலத்தை விட வயதான காலத்தில் நல்வாழ்வின் சுகாதாரத்தின் மீது அதிக கவனம் செலுத்தி வருகிறது. உலக சுகாதார அமைப்பில் 'ஹெல்த்ஸ்பான்' இதற்கான ஒரு முக்கியமான அளவீடாகும். இதை விவரித்த இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல் முதிர்ச்சி இயல் பேராசிரியர் ஜோவாவ் பெட்ரோ டி மாகல்ஹேஸ் 'நாங்கள் உடல் நலிவு காலத்தை நீட்டிக்க விரும்பவில்லை, அது மக்களை நீண்ட காலத்திற்கு நோய்வாய்ப்படுத்துகிறது, ஆகவே 20 வயது இளையவரின் ஆரோக்கியத்துடன் ஆயுட்காலத்தை நீட்டிப்பதே எங்கள் குறிக்கோள்" என்று கூறுகிறார்.

முதுமையான மக்களை ஆரோக்கியமாகவும் சுதந்திரமாகவும் வைத்திருப்பது அவர்களின் வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துகின்றது. அது மட்டுமல்லாமல், அதிகமாகி வரும் சுகாதார மற்றும் பொருளாதார சுமைகளிலிருந்து அவர்கள் விடுபடவும் அது உதவும்.

முதுமையில் ஏற்படும் முக்கியமான மாற்றம் நமது உடலின் உயிரணுக்களில் (செல்) ஏற்படுகிறது. முதுமையில் உயிரணுக்கள் தொடர்ந்து பிரிந்து விருத்தி செய்யும் தமது திறனை இழக்கின்றன. ஆகவே, அத்தகைய விருத்தி செய்யும் திறன் இழந்த உயிரணுக்கள் நமக்கு முதுமையில் அதிகரிக்கின்றன. அவற்றை அகற்றுவதின் மூலம் முதுமை எதிர்ப்பு மருந்துகள் செயல்திறன் கூடும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

ஆகவே அத்தகைய செல்களைக் கொல்லும் மருந்துகளில் ஆராய்ச்சியாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த மருந்துகள் மனிதர்களில் முதுமையை மெதுவாக்குகின்றன என்பதற்கு இதுவரை தெளிவான சான்றுகள் இல்லை. ஆனால் அவை புற்றுநோய் மற்றும் இதய நோய் உள்ளிட்ட விலங்குகளில் தோன்றும் பல்வேறு நோய்களில் சில நன்மை பயக்கும் விளைவுகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

மனித நீண்ட ஆயுள் சோதனைக்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றொரு மருந்து மெட்ஃபோர்மின் (**Metformin**) ஆகும். இது ஏற்கனவே உலகளவில் சுமார் 15 கோடி மக்களால் இரண்டாம் நிலை நீரிழிவு நோய்க்கான சிகிச்சைக்காக உபயோகிக்கப்பட்டு வருகிறது. இந்த மருந்து விலங்குகளின் ஆயுட்காலம் நீட்டிப்பதற்கான சில ஆதாரங்கள் உண்டு. இதன் முதுமை எதிர்ப்பு பண்புகள் வேக் ஃபாரஸ்ட் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகளாக நாடு தழுவிய சோதனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது.

இரசாயனங்கள் மூலம் வயதான செல்களை 'புத்துணர்ச்சியூட்டுதல்' முதுமையின் தாக்கத்தை குறைக்க சோதனை அளவில் தற்போது உள்ள ஒரு அணுகுமுறையாகும். ஆனால் தொழில்நுட்ப ரீதியாக எந்த மருத்துவ பரிசோதனைகளும் அங்கீகரிக்கப்படவில்லை. இந்தியாவில் ஆயுர்வேதத்தில், காயகல்பம் என்பது புத்துயிர்ப்பு மற்றும் உயிர்ச்சக்தியை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு முழுமையான, முதுமை எதிர்ப்பு சிகிச்சையின் ஒரு வடிவமாக விவரிக்கப்படுகிறது. 'காயகல்பம்' என்ற சொல் உடல், மனம் மற்றும் ஆன்மாவை உள்ளடக்கிய 'உடல் நிலை மறு மாற்றம்' என்று கூறலாம். இதில் செல்களின் புத்துயிர்ப்பு அடங்குமா என்று தெரியவில்லை.

இளம் வயதினரிடம் இருந்து முதியவர்களுக்கு இரத்த பிளாஸ்மா ஏற்றுவது மற்றும் ஒரு அணுகுமுறையாகும். ஆனால் அதன் செயலாக்கம் இன்னமும் முழுமையாக புரிந்து கொள்ளப்படவில்லை. ஆனால் இந்த நுட்பத்தை உபயோகித்து இரத்த மாற்றம் செய்த பிறகு வயதான எலிகளில் பல்வேறு ஆரோக்கிய முன்னேற்றங்களைக் காட்டியுள்ளது. இரத்த மாற்றம் என்பது ஏற்கனவே பாதுகாப்பான செயல்முறை என்பதால், மருத்துவர்கள் அதனால் பலன் பெற விரும்பும் மக்களுக்கு தனியார் மருத்துவமனைகள் வழங்கப்படலாம்.


# அடுத்த போப் ஆண்டவர் ஆப்பிரிக்கராக இருப்பாரா?

கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சி மட்டுமே அடுத்த போப் எங்கிருந்து வருவார் என்பதைக் கணிக்கக்கூடிய ஒரே காரணி என்றால், அடுத்த போப் ஆப்பிரிக்கராக இருப்பார் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது எனச் சொல்லலாம்.

ஆப்பிரிக்கா, உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் கத்தோலிக்க மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. 2022 மற்றும் 2023ஐ உள்ளடக்கிய இரண்டு ஆண்டு காலத்தில் இது 3.31 வீதம் அதிகரித்துள்ளது. வாத்திகானின் சமீபத்திய புள்ளிவிவரங்கள், உலகின் கத்தோலிக்கர்களில் 20 வீதம் பேர் ஆப்பிரிக்க கண்டத்தில் வாழ்வதாகக் காட்டுகின்றன.

இதற்கு நேர்மாறாக, ஐரோப்பா அதே காலகட்டத்தில் 0.2வீதம் என்ற மிகக் குறைந்த வளர்ச்சியைக் கண்டது. மேலும் 1910 மற்றும் 2010க்கு இடையில், கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 63 வீதத்துக்கும் அதிகமாகக் குறைந்துள்ளதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பியூ ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

ஒரு காலத்தில் கிறிஸ்தவத்தின் மையப் பகுதியாகக் கருதப்பட்ட இந்தப் பகுதி, உலகின் மதச்சார்பற்ற நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. கத்தோலிக்க திருச்சபை இன்னும் லத்தீன் அமெரிக்காவில் செல்வாக்கு மிக்கதாக இருந்தாலும், அங்குள்ள பல நாடுகளில் இவாஞ்சலிக்கல் கிறிஸ்தவத்திற்கு எதிராகத் தனது வலிமையை அது இழந்து வருகிறது.



**கடந்த 2013ஆம் ஆண்டு போப் பிரான்சிஸ் தேர்வு செய்யப்பட்டபோது கானாவைச் சேர்ந்த கார்டினல் பீட்டர் டர்க்சன் ஒரு முக்கியப் போட்டியாளராகக் கருதப்பட்டார்.**

கடந்த 2022இல், இந்தப் பிராந்தியத்தில் உள்ள 18 நாடுகளில் லத்தீனோபரோமெட்ரோ எனும் அமைப்பு நடத்திய ஆய்வில், கத்தோலிக்கர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை 2010இல் 70 சதவிகிதமாக இருந்தது. ஆனால், அதுவே 2020இல் 57 வீதமாகக் குறைந்துள்ளது கண்டறியப்பட்டது.

எனவே, அடுத்த போப்பை தேர்ந்தெடுக்க கார்டினல்கள் வாடிகனில் கூடும்போது, 'வேட்பாளர்" எங்கிருந்து வருகிறார் என்பதும் அடுத்த போப்பை தீர்மானிக்கும் அவர்களது முடிவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமா?

நைஜீரிய கத்தோலிக்கப் பாதிரியாரும் டீபால் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியருமான பாதிரியார் ஸ்டான் சூ இலோ அப்படித்தான் நினைக்கிறார்.

'ஒரு ஆப்பிரிக்க போப் இருப்பது சிறப்பாக இருக்குமென நான் நினைக்கிறேன்," என்று அவர் கூறுகிறார். திருச்சபையின் தலைமை, உலகளாவிய சபையின் அமைப்பைச் சிறப்பாகப் பிரதிபலிக்க வேண்டும் என்றும் அவர் வாதிடுகிறார்.

போப் பிரான்சிஸ் 2013இல் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, 9 வீதமாக இருந்த துணை-சஹாரா ஆப்பிரிக்க பகுதிகளைச் சேர்ந்த கார்டினல்களின் விகிதத்தை 2022இல் 12 வீதமாக உயர்த்தினார். இப்போது அந்த கார்டினல்களும் வாக்களிக்க உள்ளார்கள்.

'அதற்காக அவர்கள் ஆப்பிரிக்காவை சேர்ந்த ஒருவருக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று அர்த்தமல்ல' என்கிறார் பாதிரியார் சூ இலோ.

'கார்டினல்கள் மிகவும் பிரபலமான ஒருவரைத்தான் தேர்வு செய்வார்கள். அதாவது தேர்வு செய்யப்படும் நபர் ஏற்கெனவே செல்வாக்கு மிக்க நபராக இருப்பார்' என்று அவர் கூறுகிறார்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்மு- காஷ்மீர் தாக்குதலைத் தொடந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே முறுகல்!

இந்தியாவில் ஜம்மு-காஷ்மீரின் பிரபல சுற்றுலா நகரமான பஹல்காமில் பயங்கரவாதிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை 26 சுற்றுலாப் பயணிகள் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் விளைவாக, பிரபல சுற்றுலாத் தலமாக விளங்கி வந்த பஹல்காம், தற்போது அச்சுறுத்தப்படும் பகுதியாக இருப்பதாக சுற்றுலாப் பயணிகள் ஆதங்கத்துடன் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், காஷ்மீரில் இருந்து 10,000-க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வெளியேறி உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனிடையே, 4,000-க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருப்பதாகவும் கூறுகின்றனர்.



பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆதரவளிக்கும் பாகிஸ்தான் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் போராட்டங்கள் நடத்தி வரும்நிலையில், பாகிஸ்தான் மீது இந்தியாவும், இந்தியா மீது பாகிஸ்தானும் சில நடவடிக்கைகளை அறிவித்து வருகின்றன.

இதனிடையே, பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிராக இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு அளிப்பதாக, அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜம்மு-காஷ்மீரில் பஹல்காமில் நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து, சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்தல், அட்டாரி- வாகா எல்லையை உடனடியாக மூடுதல் என ஐந்து முக்கிய முடிவுகளை இந்திய அரசு எடுத்தது.

இந்நிலையில், இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக பாகிஸ்தானும் சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது.

கடந்த வியாழனன்று பாகிஸ்தான் பிரதமர் முகமது ஷெபாஸ் ஷரீஃப் தலைமையில் தேசிய பாதுகாப்பு குழு கூட்டம் நடத்தப்பட்டது.

பஹல்காமில் தாக்குதலை தொடர்ந்து இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒருதலைபட்சமானது, அநியாயமானது என்றும் மிகவும் பொறுப்பற்றது, அரசியல் ரீதியானது என்றும் அந்த கூட்டத்தில் விமர்சிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கும் இந்திய அரசின் முடிவை புறக்கணிப்பதாக அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் உலக வங்கியால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட சர்வதேச ஒப்பந்தமாகும், எனவே அதுகுறித்து தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தானுக்குச் சொந்தமான நீரைத் தடுக்கவோ அல்லது திசைதிருப்பவோ மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும், ஆற்றின் கீழ்ப் பகுதியின் உரிமைகளைப் பறிப்பதும் ஒரு போர்ச் செயலாகக் கருதப்பட்டு, முழு பலத்துடன் பதிலளிக்கப்படும்.

சிம்லா ஒப்பந்தம் உட்பட, இந்தியாவுடனான அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களையும் நிறுத்தி வைக்கும் உரிமையை பாகிஸ்தான் பயன்படுத்தும்.

வாகா எல்லையை பாகிஸ்தான் உடனடியாக மூடும். இந்தப் பாதை வழியாக இந்தியாவிலிருந்து அனைத்து எல்லை தாண்டிய போக்குவரத்தும் விதிவிலக்கு இல்லாமல் நிறுத்தப்படும். செல்லுபடியாகும் ஒப்புதல்களுடன் வாகா எல்லையை கடந்து சென்றவர்கள், ஏப்ரல் 30, 2025க்குள் அப்பாதை வழியாகத் திரும்பலாம்.

சீக்கிய மத யாத்ரீகர்களைத் தவிர, சார்க் விசா விலக்கு திட்டத்தின் கீழ் இந்திய நாட்டினருக்கு வழங்கப்பட்ட அனைத்து விசாக்களையும் பாகிஸ்தான் உடனடியாக ரத்து செய்துள்ளது. சார்க் விசா விலக்கு திட்டத்தின் கீழ் தற்போது பாகிஸ்தானில் உள்ள சீக்கிய யாத்ரீகர்கள் தவிர்த்து, இந்தியர்கள் 48 மணி நேரத்துக்குள் வெளியேற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய பாதுகாப்பு, கடற்படை மற்றும் விமானபடை ஆலோசகர்களை அனுமதியற்றவர்கள் என்று பாகிஸ்தான் அறிவிக்கிறது. அவர்கள் ஏப்ரல் 30, 2025க்குள் பாகிஸ்தானை விட்டு வெளியேற வேண்டும். இந்த ஆலோசகர்களுக்கான உதவி பணியாளர்களும் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரக பணியாளர்களின் எண்ணிக்கை 30 அதிகாரிகள் மற்றும் ஊழியர்களாகக் குறைக்கப்படும்.

இந்தியாவுக்குச் சொந்தமான அல்லது இந்தியாவால் இயக்கப்படும் அனைத்து விமான நிறுவனங்களுக்கும் பாகிஸ்தானின் வான்வெளி உடனடியாக மூடப்படும்.

இந்தியாவுடனான அனைத்து வர்த்தகமும் உடனடியாக நிறுத்தப்படும், இதில் பாகிஸ்தான் வழியாக எந்தவொரு மூன்றாம் நாட்டுக்கும் மேற்கொள்ளப்படும் வர்த்தகமும் அடங்கும். ஆகிய முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

### இந்தியாவின் நடவடிக்கைகள்

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் 26க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து சவூதி அரேபியாவில் இருந்து அவசரமாக இந்தியா திரும்பிய பிரதமர் நரேந்திர மோடி, பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவுடன் புதன்கிழமை (ஏப்ரல் 23) அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் முக்கிய அமைச்சர்கள், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்துக்குப் பின், பாகிஸ்தான் நாட்டவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவது உட்பட பாகிஸ்தானுக்கு எதிராக ஐந்து முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளதாக வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

இந்தியாவின் இந்த முடிவுகள் பற்றிப் பேசிய பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப், இந்தியாவுக்கு உடனடியாக பதிலளிக்க விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து செய்தியாளர்களிடம் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி பேசினார்.

அப்போது இந்தியா எடுத்த ஐந்து முக்கிய முடிவுகளை பற்றி அவர் தெரிவித்தார். அவை,

சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படும்

அட்டாரி- வாகா எல்லை உடனடியாக மூடப்படும்

பாகிஸ்தான் மக்களுக்கு இந்திய விசா ரத்து

இந்தியாவில் டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதர்கள் வெளியேற்றம்

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் தூதரகத்தில் உள்ள இந்திய அதிகாரிகளின் எண்ணிக்கைக் குறைப்பு

அதோடு, பாகிஸ்தான் உடனான சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படுவதாகவும் அவர் கூறினார். பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கான ஆதரவு, நம்பிக்கை அளிக்கும் விதத்திலும், மாற்றமின்றியும் கைவிடும் வரை இது தொடரும் என விக்ரம் மிஸ்ரி கூறினார்.

'அட்டாரி ஒருங்கிணைந்த எல்லை சோதனைச் சாவடி உடனடியாக மூடப்படும். உரிய ஆவணங்களுடன் எல்லை தாண்டி இந்தியாவுக்குள் வந்தவர்கள் மே 1ஆம் தேதிக்கு முன்னதாக பாகிஸ்தான் திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.'

மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக விக்ரம் மிஸ்ரி விவரித்தார்.

'பாகிஸ்தான் குடிமக்கள் சார்க் விசா திட்டத்தின் கீழ் இனி இந்தியாவில் பயணிக்க முடியாது. இதற்கு முன்னதாகப் பெற்ற விசாக்கள் ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். இந்த விசாவின் கீழ் இந்தியாவுக்குள் வந்த அனைவரும் உடனடியாக, 48 மணிநேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்' என்றார்.

'டில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் உள்ள அந்நாட்டின் ராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை ஆலோசகர்கள் நாட்டை விட்டு வெளியேற ஒரு வாரம் கெடு விதிக்கப்பட்டுள்ளது" எனவும் அவர் கூறினார்.



'இதே போன்று இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்து பாதுகாப்பு ஆலோசக அதிகாரிகள் திரும்பப் பெறப்பட்டுள்ளனர். இந்த ஆலோசகர்களுக்கான உதவி அதிகாரிகளின் பணியிடங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன' என்றார்.

'மே 1 ஆம் தேதி முதல் தூதரகங்களில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 55இல் இருந்து 30 ஆக குறைக்கப்படும் எனவும், நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்த ஆலோசனைக்குப் பிறகு, பாதுகாப்புப் படைகள் உஷார் நிலையில் இருக்குமாறு பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளது' எனவும் அவர் கூறினார்.

'பஹல்காம் தரக்குதலுக்குச் சதித்திட்டம் தீட்டியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' எனவும் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

### பாகிஸ்தானின் பதிலடி என்ன?

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப், இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு உடனடியாக பதிலளிக்க விரும்பவில்லை எனக் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் உள்ளூர் ஊடகங்களுக்கு அவர் பேட்டியளித்தபோது, இந்தியாவில் நடந்த சம்பவம் கண்டிக்கத்தக்கது என்றும், பயங்கரவாதத்தை எந்த வகையிலும் ஆதரிக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டது குறித்துப் பேசும்போது, இந்தியா நீண்ட காலமாக அதிலிருந்து வெளியேற விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் எந்தவொரு தாக்குதலுக்கும் பாகிஸ்தான் 100 சதவிகிதம் தகுந்த பதிலடி கொடுக்கும் நிலையில் உள்ளது என்றும் அவர் பேசியுள்ளார்.

பாலகோட் தாக்குதலுக்குப் பதிலளிக்கும் விதமாக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் பகுதியில் பறந்ததற்காக அபிநந்தன் பிடிபட்டதை இந்தியா நினைவில் வைத்திருக்கும் என அவர் கூறினார். மேலும், 'பிரிவினைவாதிகளுக்கு இந்தியா அடைக்கலம் அளித்துள்ளது. பலுசிஸ்தானைச் சேர்ந்த பிரிவினைவாதிகள் சிகிச்சைக்காக இந்தியா செல்கின்றனர். இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன,' என அவர் தெரிவித்துள்ளார்.

'பஹல்காம் தாக்குதலுக்கு இந்தியா மற்றவர்களைக் குறை கூறுவதற்குப் பதிலாகத் தானே பொறுப்பேற்க வேண்டும்' எனவும், 'பஹல்காம் தாக்குதல் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட 'தவறான நடவடிக்கையாக' இருக்கவும் வாய்ப்புள்ளது' என்றும் அவர் கூறினார்.

'காஷ்மீரில் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள், அங்கு பல்லாண்டுக் காலமாக இருக்கும் ஏழு லட்சம் வீரர்கள் என்ன செய்கிறார்கள் என்று யாராவது இந்தியாவிடம் கேட்க வேண்டும்?' என்றும் அவர் பேசினார்.

காஷ்மீரில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்கு உலகளவில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் பிரதமர் நரேந்திர மோடியுடன் தொலைபேசியில் பேசினார்.

இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், அமெரிக்க அதிபர் டிரம்ப், பிரதமர் மோடியை தொலைபேசி வாயிலாக அழைத்து பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

'அதிபர் டிரம்ப், இந்த தீவிரவாதத் தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்ததுடன், இந்தக் கொடூரமான தாக்குதலுக்குக் காரணமாக இருந்தவர்களை நீதியின் முன் கொண்டு வருவதற்கான இந்தியாவின் முயற்சிகளுக்கு அமெரிக்கா முழு ஆதரவு தருவதாகவும் தெரிவித்தார். தீவிரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து நிற்கின்றன' என்றும் ரந்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டார்.

இதற்கு முன்பு, டிரம்ப் ட்ரூத் சோஷியல் பக்கத்தில், 'காஷ்மீரில் இருந்து வரும் செய்திகள் மிகவும் வருத்தம் அளிப்பதாக இருக்கின்றன. தீவிரவாதத்திற்கு எதிரான இந்தப் போரில் இந்தியாவுடன் அமெரிக்கா துணை நிற்கும். பிரதமர் மோடிக்கும் இந்திய மக்களுக்கும் எங்கள் முழு ஆதரவும், ஆழ்ந்த அனுதாபமும் உண்டு' என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இந்தியாவுக்கு நான்கு நாட்கள் அரசு முறைப் பயணமாக வந்துள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் தனது எக்ஸ் பக்கத்தில், 'இந்த தீவிரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உஷாவும் நானும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த சில நாட்களாக, இந்த நாட்டின் அழகு மற்றும் அதன் மக்களால் நாங்கள் மெய்மறந்து இருக்கிறோம். இந்தக் கொடூரமான தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுடன் எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உள்ளன" என்று பதிவிட்டிருந்தார்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இதுவொரு காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் என்றும், தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இஸ்ரேல் இந்தியாவுடன் துணை நிற்கும் என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**என். ரவிவர்மன்,**
**களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தமிழருக்கு எதிரான கண்மூடித்தனமான போருக்கு சிங்கள மக்களை தயார்படுத்தி யதும் வடக்கு, கிழக்கை பிரித்ததும் ஜே. வி. பியே. இவை தமிழ் மக்களின் ஆழ்மனதில் பதிந்துள்ளன. அந்தக் கட்சியை நாம் ஏன் வெறுக்கிறோம் என்பதை கூறவேண்டியதில்லை - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் கூறியுள்ளாரே. அவர் சொல்வது சரியானதுதானே.



**வியுக்தியார்:** அவர் சொல்வது சரியானதுதான். போருக்கு சிங்கள மக்களை தயார் படுத்தியதும் வடக்கு கிழக்கை பிரித்ததும் அவர்கள் தான் என்பதால் தான் அவர் வெறுக்கிறார் என்பது சரியானதாக இருக்கலாம். ஏனெனில் அவர் தன்னைப்பற்றி சொல்வதை நாம் ஏற்றுக்கொண்டுதானே ஆகவேண்டும். ஆனால் இவை தமிழ் மக்கள் மனதில் ஆழமாக பதிந்துள்ளன என்று அவர் சொல்வதைத் தான் நம்பமுடியவில்லை. அப்படி அவர்கள் மனதில் பதிந்திருந்தால், எப்படி யாழ்ப்பாணத்தில் மாத்திரம் மூன்று பேரை தமது பிரதிநிதிகளாக பாராளுமன்றம் அனுப்பினார்கள்?. வடக்கு - கிழக்கு இணைப்பை பிரித்தது இவர்கள் தான் என்கிறார். அவர்கள் நீதிமன்றத்தில் அதற்கு எதிராக வழக்குத்தானே தாக்கல் செய்தார்கள். இவர் அப்போது எங்கே இருந்தாராம். இந்த வழக்கில் ஒரு சட்டத்தரணியையாவது நியமித்து நீதிக்காக போராடியிருக்கலாமே. நான் இப்படி எழுதுவதற்காக என்னையும் என்.பி.பி. ஆதரவாளர் என்று முத்திரை குத்திவிடாதீர்கள்.

---

**எஸ். செந்துாரன்,**
**அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:** தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய உணர்வில் இருந்து விலகிச் செல்லவில்லை என்பதை உள்ளூராட்சித் தேர்தலில் ஆணித்தரமாக நிரூபிக்கவேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் த. சித்தார்த்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'எம்மைப் பொறுத்த வரையில் எமது பொது எதிரி அரசாங்கக் கட்சி. அதனை இனிமேலும் எம்மிடையே வளரவிடக்கூடாது. தொழிற்சங்கங்கள் ஊடாகவும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவுகளின் நிமித்தமும் அரசாங்கக் கட்சி வடக்கு, கிழக்கில் கால் பதிக்க நேரிட் டது. ஆனால், இம்முறை உள்ளூராட்சி தேர்தலில் அதனை நடைபெற விடமாட்டோம்." என்று தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் சிவி விக்கினேஸ்வரன் அறைகூவல் விடுத்துள்ளார். இப்படியே ஒவ்வாரு தமிழ் தலைவர்களும் வேண்டுகோள் விடுப்பதை பார்க்கின்ற போது உங்களுக்கு என்ன தோன்றுகின்றது?



**வியுக்தியார்:** இதில் தோன்றுவதற்கு என்ன இருக்கின் றது. இது என்ன இன்று மட்டும் கேட்கின்ற வேண்டு கோள்களா? இதைத்தானே ஆறு தசாப்தங்களாக கேட்டுக் கொண்டிருக்கின்றோம். தமிழ் மக்கள் தமிழ்தேசிய உணர்வில் இருந்து விடுபடவில்லை என்பதை நிரூபிக்க கேட்கிறார் சித்தார்த்தன். கடந்த பாராளுமன்ற தேர்தல் முடிந்ததும், தமிழ் தேசிய கட்சிகளுக்கு விழுந்த வாக்குகளை கூட்டிக்கழித்து தமிழ் மக்கள் இன்னமும் தமிழ் தேசியக் கட்சிகளுடன்தான் இருக்கிறார்கள் என்றவர்கள் இவர்கள். டக்ளஸ், அங்கஜனின் வாக்குகள்தான் தேசிய மக்கள் சக்திக்கு சென்று விட்டன என்றவர்கள் இப்போது ஏன் இப்படி சொல்கிறார்கள் என்பது புரியவில்லை. விக்கினேஸ்வரனோ, தமிழ் கட்சிகளின் பிளவுகளாலேயே அரசாங்க கட்சி வடக்கு கிழக்கில் கால்பதிக்கமுடிந்தது என்கிறார். ஆனால் அவர் கட்சி தொடர்ங்கியபோது அவரை நம்பி வந்தவர்களைக் கூட ஒற்றுமையாக வைத்திருக்க தெரியாதவர், இப்போது பிளவுகளைப்பற்றி கதைக்கிறார். என்னைப்பொறுத்த வரை, இவர்களைப் போன்றவர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் தான் தமிழ் மக்களை இவர்களிடமிருந்து விலகி நிற்க செய்கின்றது என்பதை இவர்கள் புரிந்துகொள்ளும்வரை நிலமை இப்படியே மோசமாகிக் கொண்டுதான் இருக்கும்.

---

**தி. வினோத்,**
**இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** இன்று நாட்டை ஆட்சி செய்வது மக்களின் இறையாண்மையோ அல்லது நாட்டின் சட்டமோ அல்ல. மாறாக ரி-56 துப்பாக்கி தோட்டாக்கள் மற்றும் குண்டுகளே - இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனித்துள்ளாரே. நாட்டில் நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால் அவர் சொல்வது சரி என்றே தோன்றுகின்றதே. தினசரி நாட்டின் எங்காவது ஒரு மூலையில் தினமும் துப்பாக்கிச்சூடு நடந்துகொண்டு தானே இருக்கின்றது?



**வியுக்தியார்:** நீங்கள் சொல்வது சரியானதுதான். இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஏப்ரல் 22 வரையிலான காலப்பகுதியில் நாடு முழுவதும் 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதாவது தினசரி நாட்டில் எங்காவது ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. அதற்காக நாம் கவலைப்படத்தான் வேண்டும். ஆனால் சஜித் பிரேமதாசா கவலைப்படுவதுதான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தனக்கு எதிரானவர்கள், அரசியல் ரீதியில் தன்னை எதிர்கொள்ளக்கூடியவர்களை துப் பாக்கி கொண்டு அடக்கும் கலாசாரத்தை நமது நாட்டில் தொடக்கி வைத்தவரே அவரது தந்தையார் ஆர். பிரேமதாசாதானே. அதிகம் ஏன், இன்றைய ஆட்சியா ளர்கள் ஆயுதப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று போராடியபோது, ஆயிரக்கணக்கான அவர்களின் கட்சி உறுப்பினர்களை நடு வீதிகளில் போட்டுத்தள்ளியவர் இவரது தந்தையார் தான். இன்று பட்டலந்தை வதை முகாம் பற்றி பலரும் பேசிக்கொண் டிருக்கின்றனர். அந்த முகாமுக்கு வீடுகளை ஒதுக்கிக் கொடுத்தவர்தான் ரணில் விக்கிரமசிங்க. இன்று அவரைப்பற்றித்தான் பலரும் கதைக்கிறார்கள். ஆனால் அவரை அப்போது இயக்கியவரே இந்த பிரேமதாசாதானே. நாட்டில் துப்பாக்கி கலாச்சாரத்தை தொடக்கி வைத்தவரின் வாரிசே இப்போது அதுகுறித்து கவலைப் படுவதில் என்ன இருக்கின்றது?

---

**க. ராம்குமார்,**
**ஸ்ரேசன் றோட், வவுனியா.**

**கேள்வி:** 'ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களாகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்களில் இதுவரை கவனம் செலுத்த வில்லை. தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் என்று சொல்பவர்கள் அதை கவனத்தில் எடுக்கவில்லை. ஐ. நா. சபை தீர்மானத்தை உட னடியாக அமுல் படுத்த முடியாதென்று கூறினீர்கள். இதுதான் தமிழர்கள்மீது நீங்கள் காட்டுகின்ற அக்கறையா?" என்று வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பியிருக்கிறாரே? -



**வியுக்தியார்:** இதைத்தான் பொல்லைக் கொடுத்து அடிவாங்குவது என்று சொல்வார்களோ?. இவர்கள் ஆட்சிக்குக்கொண்டுவந்த நல்லாட்சி அரசு ஐந்து ஆண்டுகளில் செய்யமுடியாததை, இன்றைய ஜனாதிபதி ஆறு மாதங்களில் எப்படி செய்வது என்று ஆளுந்தரப்பில் இருந்து யாராவது கேட்டால் இவர் என்ன பதில் சொல்வார் என்று தெரியவில்லை. இளம்பராயத்திலேயே தமிழர் உரிமையைப்பெறுவதற்காக ஆயுதம் ஏந்தப்புறப்பட்ட போராளியான நமது செல்வம் அடைக்கலநாதன், கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழர் உரிமைக்கான போராட்டத்தில் ஒரு போராளியாக இருக்கிறார். இந்த நாற்பது வருடங்களில் நீங்கள் தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுத்தது என்ன என்று இதுவரை எவரும் அவரைக் கேள்விக்கு உட்படுத்தாததால் தப்பியிருக்கிறார். அது சரி, ஜனாதிபதியோ அல்லது அவரது கட்சியில் யாராவது எப்போதாவது ஐநா தீர்மானத்தை அமுல்படுத்துவதாக சொல்லியிருக்கிறார்களா?.

---

**க. ஜெயரூபன்,**
**செட்டிபாளையம், மட்டு.**

**கேள்வி:** 'கோட்டபய இரவில் குழியில் விழுந்தார். பகலில் அநுர குழியில் விழுந்தார். காலையில் சஜித்துடன் விழத் தயாராக இருக்கும் மூளை உள்ளவர்கள் இலங்கையில் யாரும் இல்லை. அப்படியானால் மீதமுள்ள ஒரே தீர்வு ரணில் விக்கிரமசிங்கவே. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட் டெடுக்கக்கூடிய ஒரே தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே" எனவும் அவர் சில மாதங்களில் ஜனாதிபதியாக வருவார் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** கனவு காண்பதற்கு இந்த நாட்டில் எந்தத் தடையும் இருப்பதாக நான் அறிந்தவரையில் தெரியவில்லையே. அவர் சஜித் தரப்பிலிருந்து ரணில் தரப்பிற்கு வந்தபோது சில மதாங்களில் ரணில் மீண்டும் வெற்றிபெற்று ஜனாதிபதியாக வருவார் என்ற நம்பிக் கையில்தான் கட்சி மாறினார். அந்த நம்பிக்கை யில் இப்போதும் பேசுகிறார் என்று நினைக்கின்றேன். அதைவிட முக்கியமானது அவரைப்போலவே வேறு சிலரும் கட்சிமாறி இந்தப் பக்கம் வந்தார்கள். அவர்கள் எல்லோரும் எங்கே போவது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களை தொடர்ந்து வைத்திருக்க இதுபோன்ற கற்பனைக்கதைகளை சொல் லிக்கொண்டிருக்கவேண்டிய தேவை அவருக்கு இருக் காதா என்ன?. கோட்டபாய எப்போது இரவில் குழியில் விழுந்தார். அவர் தான் வெட்டிய குழியில் தானே போய் விழுந்தார். அனுர எப்போதாம் குழியில் விழுந்தார். இவரே சொல்லும் ரணில் விக்கிரமசிங்க போட்ட வீதி யில்தான், அதாவது 'நவதாராளவாதம்' என்ற வீதியில் தான் தாங்களும் சென்றுகொண்டிருக்கின்றோம் என்று அண்மையில் ஜேவிபியின் மூத்த தலைவரும் அமைச்சரு மான லால்கந்த கூறியிருந்தாரே. அவர்கள் ரணில் போட்ட வீதியில் சரியாகத்தான் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பது ராஜித போன்ற மூத்த அரசியல்வாதிக்கு தெரியாதது இல்லையே.

---

**என். ராஜேந்திரன்**
**காந்திநகர், கிளிநொச்சி.**

கேள்வி: 'எங்களை பொறுத்தவரையில் இந்த பூகோள ஆதிக்க போட்டியில், நாங்கள் வெளிப்படையாக கூறுகின்றோம், இலங்கைத் தீவை பொறுத்த வரை விசேடமாக தமிழ்த் தேசத்தை பொறுத்தவரையிலே நாங்கள் இந்தியாவுக்கு ஒரு முன்னுரிமை வழங்கியே ஆகவேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு இலங்கைத் தீவில் பாதுகாப்பு நலன்சார்ந்த அக்கறை உள்ளது. அதேநேரம், சீனா போன்ற ஒரு வல்லரசு இலங்கையிலோ அல்லது தமிழ்த் தேசத்திலோ ஏதோ ஒரு நட்புறவை பேணுவதற்கு விரும்பி, உதவி செய்வதற்கு வருகின்ற நேரத்தில் அவர்களை எதிர்க்கக்கூடாது என்பதிலும் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்." என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருப்பதை கவனித்தீர்களா?. இந்தியாவுக்கு முன்னுரிமையாம் சீனாவையும் எதிர்க்கக்கூடாதாம். ஒன்றும் புரியவில்லையே.

**வியுக்தியார்:** இதில் என்ன புரிந்துகொள்ள இருக்கின்றது. நாம் நமது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருப்பதாக கூறிக்கொண்டிருக்கின்ற இனம். அதுகும் சர்வதேசத்தை மட்டுமே நம்பிக்கொண்டு இருக்கின்ற வர்கள். எல்லா நாடுகளுடனும்தான் தொடர்பில் இருக்கவேண்டும். அதைவிட முக்கியமானது கடந்த பல தசாப்தங்களாக இந்தியாவை மட்டும் நம்பிக்கொண்டி ருந்து எதைத்தான் அடைந்திருக்கின்றோம். இதுபற்றி நாம் விவாதிப்பதென்றால், அதற்கு முழுக் கட்டுரையே தேவையாக இருக்கும். ஆனால், இரண்டு தரப்புக்களையும் சமநேரத்தில் கையாளுகின்ற தகுதி நமது பொன்னம்பலத்திற்குதான் உண்டு. ஒற்றையாட்சியையும் கடைசி வரை எற்கமாட்டோம். ஆனால் பாராளுமன்றத்தில் எம்.பி.யாக இருப்பதற்காக அதனை ஏற்றுக்கொண்டு சத்தியப்பிர மாணம் செய்வோம் என்று சமநேரத்தில் இரண்டையும் கையாளத் தெரிந்தவர் அல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடா தேர்தல் 2025:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

## ட்ரம்பின் வர்த்தக போர், 51ம் மாநில இணைப்பு அச்சுறுத்தலில் நிகழும் தேர்தல்!

அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் மற்றும் கனடாவை அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாற்ற டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தியதன் பின்னணியில் கனடா தேர்தல் நாளை ஏப்ரல் 28இல் நடைபெறுகிறது.

இத் தேர்தலில் அரசியலில் புதியவரான லிபரல் கட்சியின் மார்க் கார்னிக்கும் கன்சர்வேடிவ் பியரே பொலீவியருக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

கனடாவுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக ட்ரம்ப் உருவாக்கியுள்ள இக்கட்டான சூழலில், நாட்டை வழிநடத்த யார் தகுதியானவர் என்பதைக் கனடா மக்கள் தேர்வு செய்ய உள்ளனர்.

நீண்ட காலம் பிரதமராக ஜஸ்டின் ட்ரூடோ இருந்தவர். இருப்பினும், பல்வேறு காரணங்களால் அவருக்கான அழுத்தம் அதிகரித்தது என்பதும் உண்மையே. இதனால் வேறு வழியின்றி தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து கனடா நாட்டின் புதிய பிரதமராக, இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநரான மார்க் கார்னி சமீபத்தில் பதவியேற்றிருந்தார்.

கடைசியாக 2021ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. கனடா நாட்டின் சட்டப்படி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்த வேண்டும். அதன்படி இந் தாண்டு தேர்தல் நடத்த வேண்டி இருந் தது. பிரதமர் பதவியும் கைமாறிய நிலை யில், இத் தேர்தல் முடிவு முக்கியத்து வம் மிக்கதாக எதிர் பார்க்கப்படுகிறது.

ஆனால் ட்ரூடோவுக்கு பதிலாக கார்னி பிரதமராகத் தேர்வாகியுள்ள நிலையில், அவருக்கு மக்களிடையே அதிக செல்வாக்கு இருக்கி றது. இதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயலும் கார்னி, இதன் காரணமாகவே தேர்தலை உடனடியாக அறிவித்துள்ளார்.


மேலும், ஒட்டுமொத்த கனடாவுக்கான அச்சுறுத்தலாக ட்ரம்பை நிறுத்தம் கார்னி அதன் மூலம் வாக்குகளை ஒருங்கிணைக்க முடியும் என நம்புகிறார். இது தொடர்பாக கார்னியின் கூற்றுப்படி 'அதிபர் ட்ரம்பின் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் நமது இறையாண்மைக்கு அவர் விடுத்த அச்சுறுத்தல்கள் காரணமாகக் கனடா இப்போது நெருக்கடியான சூழலை எதிர் கொண்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

கனடாவைப் பாதுகாக்க நாம் இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. கனடாவில் முதலீடு செய்ய, கனடாவைக் கட்டியெழுப்ப, கனடாவை ஒன்றிணைக்க பல்வேறு விஷயங்களை நாம் செய்ய வேண்டி இருக்கிறது. இதற்குக் கனடா மக்கள் ஆதரவளிப்பார்கள் என நம்புகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

கனடாவில் நான்கு முக்கிய அரசியல் கட்சிகள் உள்ளன. லிபரல், கன்சர்வேடிவ், நியூ டெமாக்ரடிக் கட்சி மற்றும் பிளொக் கியூபெக்கோயிஸ். இவற்றில், லிபரல் மற்றும் கன்சர்வேடிவ் ஆகிய இரண்டு கட்சிகளுக்கு மட்டுமே பெரும்பான்மை அரசாங்கத்தை அமைக்கத் தேவையான 172 இடங்களைப் பெறும் வாய்ப்பு உள்ளது.


கனடாவின் நாடாளுமன்றத்தில் உள்ள 343 இடங்களில் பெரும்பான்மையைப் பெற முக்கிய கட்சிகள் கடுமையாக போட்டியிடுகின்றன. பெரும்பான்மை இடங்களை கைப்பற்றும் கட்சியின் தலைவர் பிரதமராவது வழக்கமாகும்.

ஆனால் எந்தக் கட்சியும் ஒட்டுமொத்த பெரும்பான்மை பெறவில்லை என்றால், அதன் விளைவு தொங்கு






வரலாற்று, புவியியல் ரீதியில் நேச அயல் தேசங்களான கனடாவும் அமெரிக்காவும் முதன் முறையாக வர்த்தக போரை எதிர் கொண்டுள்ளன. அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாற்ற டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தலின் பின்னர் நடைபெறும் கனடா தேர்தல் உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.



நாடாளுமன்றம் அல்லது சிறுபான்மை அரசாங்கம் அமைக்க வழிவகுக்கும்.

கனடாவைப் பொறுத்தவரை ஆளும் லிபரல் கட்சிக்கும் கன்சர்வேடிவ் கட்சிக்கும் இடையே தான் கடும் போட்டி நிலவுகிறது. அங்கு ட்ரூடோ இருந்தவரை கன்சர்வேடிவ் கட்சிக்கான ஆதரவே அதிகமாக இருந்தது. ஆனால், கார்னி பதவியேற்றவுடன் நிலைமை மாறியுள்ளது.

தற்போதைய கருத்து கணிப்புக்களில் கன்சர்வேடிவ் கட்சியைக் காட்டிலும் லிபரல் கட்சிக்கான ஆதரவு சற்று அதிகமாக இருக்கிறது. இருப்பினும், தேர்தலில் கடும் போட்டி இருக்கும் என்றே கூறப்படுகிறது.

ஆனால் கருத்துக் கணிப்புகளில் ட்ரூடோ ராஜினாமா செய்வதற்கு முன்பு லிபரல்களை விட இரட்டை இலக்க முன்னிலை வகித்த எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் இருந்தது.

அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் மற்றும் கனடாவை அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாற்ற டொனால்ட் ட்ரம்பின் அச்சுறுத்தல்களின் பின்னணியில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், வாக்கெடுப்புகளில் லிபரல்கள் முன்னிலை பெறுவதாக மாறியுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதற்கு முன் [illegible] இல்லாத

60 வயதான கார்னி அரசியலில் புதியவர் ஆவார். அவர் ட்ரூடோவின் அரசாங்கத்திலும் பணியாற்றவில்லை. நீண்ட காலமாக நிதி மற்றும் பொது சேவையில் பணியாற்றி உள்ளார்.

கனடா வங்கியின் தலைவராக இருந்த மார்க் கார்னி , 2008 நிதி நெருக்கடியில் கனடாவை வழிநடத்த உதவினார். மேலும் 2013 ஆம் ஆண்டில் இங்கிலாந்து வங்கியை நடத்தும் முதல் குடிமகன் அல்லாதவர் என்ற பெருமையையும் பெற்றார். பிரெக்ஸிட்டின் நிதி நிலை தாக்கத்தை நிர்வகிக்கவும் உதவினார்.

ட்ரூடோவின் கார்பன் வரியை ரத்து செய்து, மூலதன ஆதாய வரி அதிகரிப்பை ரத்து செய்து வருகிறார். ஆனால் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், வீட்டுவசதி போன்ற பிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உறுதி பூண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ட்ரம்புடன் கண்டா அரசு முட்டி மோதிக் கொண்டாலும், பேச்சுவார்த்தை நடத்த திரு. கார்னி சிறந்த தேர்வாக இருப்பதாக கனடியர்கள் நம்புவதாக கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன.

அமெரிக்காவிற்கான கனேடிய ஏற்றுமதிகளில் 25 வீதம், எரிசக்தி தயாரிப்பு ஏற்றுமதிகளில் 10 வீதம் மற்றும் எஃகு மற்றும் அலுமினிய பொருட்களில் 25 வீதம் வரியை விதித்த பிறகு, திரு. கார்னி அமெரிக்க பொருட்களுக்கு பழிவாங் கும் வகையில் 25 வீதம் வரிகளை அமல்படுத்தினார்.

ட்ரம்பின் விரோதத்திற்கு கார்னியின் வலுவான எதிர்வினை கனேடிய தேசிய வாதத் தில் தீர்க்கமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்றே கூறலாம்.


45 வயதான கன்சர்வேடிவ் தலைவர் பியரே பொலீவி யர், மார்க் கார்னி யின் முக்கிய போட்டியாளராக விளங்குகிறார். அவர் 'கனடாவை முதலில் வைப்பேன்' என்றும் கூறுகிறார். முன்னாள் கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப் பரிடம் பணி யாற்றி உள்ளார்.

முதலில் 2004 இல் கனடாவின் நாடாளுமன்றத்தின் இளைய உறுப்பி னராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2006 மற்றும் 2015 க்கு இடையில் ஹார்பர் நிர்வாகத் தின் கீழ் அவர் விரைவாக பல பதவிகளில் உயர்ந்தார். இறுதியாக 2022 இல் அவர் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரானார்.

அவரது தேர்தல் பிரச்சாரத்தில் கொரோனா தொற்று நோய்க்குப் பின்னர் வாக்காளர்களின் கட்டுப்படியாகாத வீட்டுவசதி, வாழ்க்கைச் செலவு மற்றும் சுற்றுச்சூழல் வரிகள் மீதான விரக்தியை பொய்லீவ்ரே பயன்படுத்திக் கொள்கிறார்.

மேலும் பியரே பொலீவியர் ஒரு தசாப்த கால லிபரல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரத் தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

ஆனால் அவரது கட்சியும் ட்ரம்ப் வரிவிதிப்பால் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ட்ரம்பின் வரிவிதிப்புகளும், கனடாவை இணைக்கும் அச்சுறுத்தல்களும் கன்சர்வேடிவ்களின் 25 வீத முன்னிலையை முடக்கி உள்ளது.




பியரே பொலீவியர் அமெரிக்க நிர்வாகத்திலிருந்து தன்னைத் தூர விலக்கிக் கொள்ள விரும்புகிறார். வரி குறைப்புக்கள் மற்றும் அதிகரித்த வள உற்பத்தி உள்ளிட்ட அவரது கொள்கைகள் முதலீட்டைத் திரும்பக் கொண்டுவரும் என்றும், கனடா மேலும் தன்னம்பிக்கை கொண்டதாகவும், ட்ரம்பை எதிர்த்து நிற்க சிறந்த முறையில் தயாராகவும் இருக்கும் என்றும் தேர்தல் பிரச்சாரங்களில் கூறியுள்ளார்.

காலநிலை மாற்றம் குறித்த லிபரல் கட்சியின் திட்டங்களின் பெரும்பகுதியை அவர் அகற்ற விரும்புகிறார். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கனடாவுக்கு எதிராக இறக்குமதி வரிகளை அறிவித்துள்ள நிலையில், அதைக் குறிப் பிட்டு இதுபோன்ற முக்கியமான தருணங்களில் நாட்டை யார் வழிநடத்த வேண்டும் என்பதை மக்களே முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல்கள் - தேசிய மக்கள் சக்தி -...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க தலைவர்களும் விடுபட வேண்டும். அத்துடன் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட காரணத்தினால்தான் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் பாராளுமன்ற தேர்தலில் பெருமளவில் வாக்களித்தார்கள் என்ற மருட்சியில் இருந்தும் அதன் தலைவர்கள் விடுபட வேண்டும்.

இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சிகள் அவற்றின் எதிர்கால இருப்பை உறுதிசெய்வதற்கு பெரும் போராட்டத்தை நடத்தும் ஒரு களமாக உள்ளூராட்சி தேர்தல்கள் மாறியிருக்கின்றன.

பாராளுமன்ற தேர்தலில் தங்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு யானையைப் பார்த்த குருடர்கள் போன்று தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொரு காரணத்தைக் கூறினாலும் கூட, உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 16 வருடகாலத்தில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை சமகால நிலைவரம் வேண்டி நிற்பதற்கு இசைவாக அடுத்த கட்டத்துக்கு நடைமுறைச் சாத்தியமான வழியில் நகர்த்துவதற்கு தவறியதே அந்த மக்களின் அதிருப்திக்கு பிரதான காரணமாகும். தங்களுக்கு ஒரு பாடத்தைப் புகட்ட வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்பினார்கள் என்பதை சில தமிழ்த் தலைவர்கள் வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டார்கள்.

இன்று சகல தமிழ்க் கட்சிகளுமே தேசிய மக்கள் சக்தியை 'பொது அரசியல் எதிரியாக' கருதி அதற்கு எதிராக தீவிரமான பிரசாரங்களை முன்னெடுத்திருக்கின்றன. ஆனால், அந்த பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்பட்டு ஓரணியில் நிற்பதற்கு அவற்றின் தலைவர்கள் தயாராக இல்லை. தமிழ்த் தேசியவாதத்தின் இருப்பை உறுதி செய்யவும் தேசியவாத உணர்வை தமிழ் மக்கள் இழந்து விடவில்லை என்பதை நிரூபிக்கவும் உள்ளூராட்சி தேர்தல்களில் தங்களுக்கே தமிழ் மக்கள் முழுமையாக வாக்களிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்கள் எவ்வாறு வாக்களிக்கிறார்கள் என்பதை சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ஒருபோதுமே நேர்மறையான கொள்கையையோ அல்லது அணுகுமுறையையோ கடைப்பிடிக்காத ஒரு தேசிய (தென்னிலங்கை) கட்சிக்கு வாக்களிப்பதில் இருந்து தமிழ் மக்களை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பிரயத்தனங்கள் இன்றைய தமிழ்த் தேசியவாத அரசியல் தலைவர்களின் தோல்வியை அல்லவா அம்பலப்படுத்துகிறது?

தமிழ்க்கட்சிகள் அல்லது கூட்டணிகள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்திருக்கின்ற அதேவேளை, எதிர்காலத்தில் தமிழ்த் தேசியவாத அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதுவதற்கான ஒரு ஆளுமைப் போட்டிக் களமாகவும் அவர்கள் இந்த தேர்தலை நோக்குகிறார்கள் என்பதை பிரசாரங்கள் தெளிவாக வெளிக்காட்டுகின்றன. தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொள்கின்ற அதேவேளை தங்களது கட்சிக்கு மாத்திரமே வாக்களிக்க வேண்டும் என்றும் மறுபுறத்தில் அவர்கள் கூறுகிறார்கள்.

சகல சமூகங்களையும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் சமத்துவமாக நோக்குவதே தங்களது கொள்கை என்று கூறுகின்ற ஜே.வி.பி.யின் தலைவர்கள் அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டுக்கு எதிரானவர்கள் என்பது வரலாறு. அவர்களின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கின் தமிழ்ப் பகுதிகளில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றினால், தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலமாகத் தீர்வொன்றைக் காண்பதற்கு தமிழ் மக்கள் நடத்திவந்த நீண்டகாலப் போராட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த கோட்பாட்டுக்கு பெரிய பின்னடைவு ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது என்பதை இந்த பத்தியில் ஏற்கெனவே ஒரு தடவை சுட்டிக்காட்டியிருந்தோம்.

பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவை அதிகாரப்பரவலாக்கத்துக்கு எதிரான தங்களது நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் முயற்சித்தார்களே தவிர, அந்த மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வைக் காண்பதிலோ அல்லது அதற்கான உகந்த சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு தென்னிலங்கை பெரும்பான்மையின மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதிலோ அக்கறை காட்டுவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் தங்களது பல தசாப்தகாலப் போராட்டத்தின் அரசியல் நியாயப்பாட்டை மலினப்படுத்தக்கூடிய முறையில் உள்ளூராட்சி தேர்தல்களில் தங்களது வாக்குகளைப் பயன்படுத்தக்கூடாது.

அதேவேளை, கற்பனாவாத சுலோகங்களில் தங்கியிருக்கும் பழையபோக்கை மாற்றி, சமகால நிலைவரத்துக்கு ஏற்ற முறையில் தமிழ்க் கட்சிகள் தங்களை தகவமைத்துக் கொள்வதில் எந்தளவுக்கு அக்கறை காட்டும் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

தமிழ்த் தேசியவாதத்தின் இருப்பை உறுதிசெய்வதற்கு உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை மாத்திரம் கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள் இலங்கை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக பெரும் எண்ணிக்கையில் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதால் ஏற்பட்டிருக்கும் ஆபத்து குறித்து எதுவும் பேசுவதில்லை.

சொந்த மண்ணைக் காப்பாற்றுவதற்காக வெளிநாடுகளுக்கு புலம்பெயர வேண்டாம் என்று எந்தவொரு தமிழ் அரசியல்வாதியும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்ததாக நாம் அறியவில்லை. அவர்களில் பலர் தங்களது குடும்பங்களை பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வசதியாக குடியமர்த்திவிட்டே தீவிரமாக தமிழ்த் தேசியவாதம் பேசுகிறார்கள்.

இலங்கையில் பரப்பளவில் மூன்றாவது பெரிய மாகாணமாக விளங்கும் வடமாகாணம் மிகவும் குறைந்தளவு சனத்தொகையைக் கொண்டதாக இருக்கிறது. வடக்கில் ஒரு சதுரகிலோ மீட்டருக்கு 131 பேர்தான் வாழ்கிறார்கள் என்று 2021 குடிசன மதிப்பீடு கூறுகிறது. மக்கள் இல்லாத மண்ணில் செய்யக்கூடிய அரசியலின் இலட்சணம் எத்தகையதாக இருக்கப் போகிறது?

சொந்த மண்ணில் தொடர்ந்தும் வாழ்ந்தால் தங்களுக்கும் தங்களது சந்ததிகளுக்கும் நல்ல எதிர்காலம் ஒன்று இருக்கும் என்ற வலுவான நம்பிக்கையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய நடைமுறைச் சாத்தியமான -விவேகமான அரசியல் அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது குறித்து தமிழ் அரசியல்வாதிகள் இனிமேலாவது சிந்திக்க வேண்டும். அதைச் செய்யத்தவறினால், ஏற்படக்கூடிய ஆபத்து தெளிவாகத் தெரிகிறது.

போரின் முடிவுக்கு பின்னரான இன்றைய காலப்பகுதியில் நிலைவரங்கள் பெருமளவுக்கு மாறிவிட்டன என்பதை தமிழ்க் கட்சிகள் உணராத பட்சத்தில், உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை மாத்திரமல்ல, சகல தென்னிலங்கை கட்சிகளையும் நிராகரித்து தமிழ்க்கட்சிகளை மீண்டும் ஆதரிப்பதன் மூலம் ஆரோக்கியமான மாற்றம் எதுவும் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறித்து எழுகின்ற சந்தேகம் நியாயமானதே.

# அடுத்த போப் ஆண்டவர் ஆப்பிரிக்கராக...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

'இன்று வாடிகனில், மூத்த ஆப்பிரிக்க மதகுருமார்களில் எவரும் எந்த முக்கியப் பதவியையும் வகிக்கவில்லை என்பதுதான் சவால். அது ஒரு முக்கிய சிக்கல். போப் பதவிக்கு வரக்கூடிய ஆப்பிரிக்க கார்டினல்களை பற்றி நீங்கள் சிந்தித்தால், இன்றைய சூழலில் உலகளாவிய கத்தோலிக்க மதத்தில் யார் முக்கியத்துவம் வாய்ந்தவர் என்ற கேள்வி எழுகிறது. ஆனால் அப்படி யாரும் இல்லை என்பதே நிதர்சனம்' என்கிறார் பாதிரியார் சூ இலோ.

இந்த நிலை, 2013ஆம் ஆண்டு கானாவை சேர்ந்த கார்டினல் பீட்டர் டர்க்சன் போப் பதவிக்கு ஒரு வலுவான போட்டியாளராக இருந்ததற்கும், 2005ஆம் ஆண்டு நைஜீரிய கார்டினல் பிரான்சிஸ் அரின்ஸ், போப் பெனடிக்ட் ஒஏஐ தேர்வு செய்யப்படுவதற்கு வழிவகுத்த மாநாட்டில் ஒரு சாத்தியமான வேட்பாளராக இருந்ததற்கும் நேர்மாறாக உள்ளது என்று பாதிரியார் சூ இலோ கூறுகிறார்.

ஆப்பிரிக்காவில் இருந்து இதுவரை மூன்று போப்கள் வந்திருந்தாலும்கூட, அதில் கடைசி போப் ஆண்டவரான - போப் கெலாசியஸ் ஐ - 1,500 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். எனவே இன்னொரு ஆப்பிரிக்க போப் வருவதற்கு இதுவே சரியான நேரம் என்று பலர் வாதிடுகின்றனர்.

ஆனால் சில ஆப்பிரிக்க கத்தோலிக்கர்கள், அடுத்த போப் எங்கிருந்து வரக்கூடும் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக நினைக்கிறார்கள்.

நோட்டர் டேம் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் நைஜீரியாவில் பிறந்த கத்தோலிக்க பாதிரியாருமான பவுலினஸ் இகெச்சுக்வு ஒடோசோரும் அப்படித்தான் கருதுகிறார்.

'ஒருவர் ஆப்பிரிக்காவில் இருந்து வருவதால் அல்லது ஐரோப்பாவில் இருந்து வருவதால், அவர்தான் பிரதான வேட்பாளர் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை,' என்று அவர் கூறுகிறார்.

'நீங்கள் எங்கிருந்து வந்தாலும், நீங்கள் தேர்வு செய்யப்பட்டவுடன், அனைவரின் பிரச்னைகளும் உங்கள் பிரச்னையாக மாறும். மக்கள் எங்கிருந்தாலும், அவர்கள் எத்தனை பேர் இருந்தாலும், எந்தச் சூழலில் இருந்தாலும், கிறிஸ்துவ சமூகத்தைக் கட்டிக்காப்பதே உங்களுக்கு இருக்கும் ஒரே கவலையாக இருக்கும்' என்கிறார்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், போப் தேவாலயத்தின் தலைமை இறையியலாளராக இருக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

போப் என்பவர் பாரம்பரியத்தை நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும், அதைப் பயன்படுத்தி மக்களுக்கு வழிகாட்டக் கூடியவராகவும் இருக்க வேண்டும் என்று பவுலினஸ் நினைக்கிறார்.

அடுத்த போப் ஆப்பிரிக்காவை சேர்ந்தவராக இருக்க வேண்டுமா என்று கேட்கப்படுவது விரக்தியை ஏற்படுத்துவதாக பாதிரியார் ஒடோசோர் கூறுகிறர். பன்மைத்துவத்தின் அடையாளமாக மட்டுமே ஒரு ஆப்பிரிக்க போப் பார்க்கப்படுவதை அவர் விரும்பவில்லை.

இந்தப் பார்வை, 'சரி, ஆப்பிரிக்க கத்தோலிக்கர்கள் எண்ணிக்கையில் அதிகரித்து வருகிறார்கள். எனவே நாம் அவர்களுக்கு ஏன் ஒரு போப்பை வழங்கக் கூடாது' என்று மக்கள் சொல்வது போல் இருக்கிறது' என்கிறார் அவர்.

அவரது பார்வையில், ஆப்பிரிக்காவில் உள்ள விசுவாசிகளைப் பாதிக்கும் விஷயங்களை வத்திகானில் அதிகாரப் பதவிகளில் இருப்பவர்கள் தீவிரமாக எடுத்துக் கொள்வதை உறுதி செய்ய இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும்.

'சில நேரங்களில், ஆப்பிரிக்கர்கள் முக்கியமற்றவர்கள் என்பது போல அல்லது அவர்களுடைய நம்பிக்கை ஏதோவொரு வகையில் தாழ்ந்ததாகவோ அல்லது போலியாகவோ பார்க்கப்படுவது போல மற்றும் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படக் கூடாது என்பது போன்ற ஒரு சூழல் நிலவுகிறதோ எனத் தோன்றுகிறது' என்று அவர் கூறுகிறார்.

'ஆப்பிரிக்கர்கள் தங்கள் பிரச்னைகள் அதிகாரத்தில் இருப்பவர்களின் காதுகளுக்குச் செல்லவில்லை என்று உணரும்போது, அவர்கள் கேள்வி கேட்கத் தொடங்குவார்கள். சரி, ஒருவேளை நம்மில் இருந்து ஒருவர் அங்கு இருந்தால் மட்டுமே நமது குரல் ஒலிக்கும் என்ற எண்ணமும் தோன்றும்' என்கிறார் பாதிரியார் ஒடோசோர்.

ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து கார்டினல்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், அவர்களுக்கு திருச்சபையில் உண்மையான அதிகாரம் இல்லை என்று பாதிரியார் சூ இலோ கருதுகிறார். பாதிரியார் ஒடோசோரின் கருத்தும் அதுவே.

'போப் பிரான்சிஸ் நியமிக்கும் கார்டினல்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை,' என்று அவர் விளக்குகிறார்.

ஆனால், "நீங்கள் அவர்களை நியமிக்கும்போது, அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறீர்களா? நீங்கள் நியமிக்கும் இந்த மக்களுக்கு அதிகாரத்தைக் கொடுங்கள், வேலையில் அவர்களை நம்புங்கள், அதை அவர்கள் சுதந்திரமாகச் செய்யட்டும்' என்று அவர் கூறுகிறார்.

திருச்சபையின் தலைமை, அதன் உறுப்பினர்களை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என போப் பிரான்சிஸ் மேற்கொண்ட முயற்சிகளைத் தடுக்கக்கூடிய ஒரு பிரச்சினையை, பாதிரியார் சூ இலோ மற்றும் பாதிரியார் ஒடோசோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

'திருச்சபையில் இனவெறி பற்றிய கேள்வி இன்னும் உள்ளது. நாம் ஒருபோதும் அதைப் பற்றிப் பேசியதில்லை' என்று பாதிரியார் ஒடோசோர் கூறுகிறார்.

'அது ஒருவரை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும், அவர் போப் அல்லது கத்தோலிக்க தேவாலயத்திற்கு எவ்வளவு நெருக்கமானவராக இருந்தாலும் சரி, அவர் என்ன செய்தாலும் சரி, அவர் ஒரு ஆப்பிரிக்க போப்பாக மட்டுமே பார்க்கப்படுவார்.'

அடுத்த போப்பை நியமிக்கும் கார்டினல்களில், கிட்டத் தட்ட மூன்றில் இரண்டு பங்கு கார்டினல்களை, 2022ஆம் ஆண்டின் இறுதிக்குள் போப் பிரான்சிஸ் தேர்ந்தெடுத்திருந்தார்.

இது ஒரு புதிய போப்பைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான பெரும்பான்மையைவிட சற்று குறைவு. அதாவது, யார் புதிய போப்பாக தேர்வு செய்யப்பட்டாலும், ஏழைகள் மற்றும் உரிமை மறுக்கப்பட்டவர்களைச் சென்றடைவதில் போப் பிரான்சிஸ் காட்டும் முக்கியத்துவத்தை அவர்களும் பகிர்ந்து கொள்வதற்கான நல்ல வாய்ப்பு உள்ளது.

ஆனால் யார் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதைக் கணிப்பது மிகவும் கடினம். அதற்கு மற்றொரு முக்கியக் காரணி உள்ளது என்று பாதிரியார் சூ இலோ கூறுகிறார்.

'கடவுள், பரிசுத்த ஆவி, திருச்சபையின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க உதவுகிறார் என்று கத்தோலிக்கர்கள் நம்புகிறார்கள்,' என்று அவர் கூறுகிறார். அதாவது, 2013இல் போப் பிரான்சிஸ் தேர்வு செய்யப்பட்டதைப் போல, ஓர் ஆச்சரியமான முடிவாக இருக்கலாம்.

'அவர் வருவார் என யாரும் கணிக்கவில்லை'என்று பாதிரியார் சூ இலோ கூறுகிறார்.

'அடுத்த போப், திருச்சபை விவகாரங்களில் தனக்கு முன்பிருந்த போப் கொண்டிருந்த அதே பார்வையைக் கொண்டிருப்பது முக்கியமா, அல்லது அவர் ஆப்பிரிக்காவை சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பது முக்கியமா?' என பாதிரியார் சூ இலோவிடம் கேள்வி எழுப்பினோம்.

'நான் ஒரு நல்ல பாதிரியாரைப் போல பதிலளிப்பேன்,' என்று அவர் சிரித்துக் கொண்டே தொடர்ந்து பேசினார்.

'பிரான்சிஸின் கண்ணோட்டத்தைத் தொடரும் ஒரு போப்பை கடவுள் நமக்குத் தருவார் என்று நான் பிரார்த்தனை செய்வேன். அத்தகைய நபர் ஆப்பிரிக்காவில் இருந்து வருவார் என்று நான் பிரார்த்தனை செய்வேன்." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆம் தர...

இல்லாமல் போகிறது.
எதிர்காலத்தில் பின் தங்கிய பாட
சாலைகளை இல்லாமல் செய்யப்பட்டு
அனைத்து பாடசாலைகளுக்கும்
வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
எதிர்வரும் ஐந்து வருடங்களில் ஐந்தாம்
தரப் புலமை பரிசில் பரீட்சை முற்றாக
இல்லாதொழிக்கப்படும்-என்றார். (அ)

## வடக்கு...

சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-
நாட்டில் தமிழர்கள் சிங்களவர்கள்
முஸ்லிம்க ளுக்கிடையில் பாரிய இடை
வெளிகாணப்பட்டது. பழைய அரசியல்
வாதிகளினால் இந்த பிரிவினைவாதம்
ஏற்பட்டது. இதன் காரணமாக வடக்கு
மக்கள் வடக்கின் தமிழ்த் தலைவர்களை
யும், தென்பகுதி மக்கள் தெற்கின் சிங்கள
கட்சிகளின் தலைவர்களையும், முஸ்லிம்
மக்கள் முஸ்லிம் தலைவர்களையும்
தேர்ந்தெடுத்தனர்.

ஆனால் முதற் தடவையாக கடந்த
பொதுத்தேர்தலில் வடக்கு தமிழ்மக்
களும் தென்பகுதி சிங்கள மக்களும்
கிழக்கு முஸ்லிம் மக்களும் தேசிய
மக்கள் சக்தியை தெரிவு செய்தார்கள்.
அவர்கள் மக்கள் தேசிய மக்கள் சக்தி
மீது பாரிய நம்பிக்கை வைத்தமையினா
லேயே தேர்தலில் எமக்கு வெற்றியைப்
பெற்றுத் தந்தார்கள்.

அத்துடன் பிரிந்திருந்த அனைவரும்
தற்போது ஒன்றாகியுள்ளனர். இனிமேல்
நாம் பிரியவேண்டிய தேவை இல்லை.
எமக்குள் பிளவு ஏற்படவும் தேவை
யில்லை. இனவாத அரசியல் எமக்கு
இனியும் வேண்டாம்.

அதேசமயம் நாம் தேசிய ஒற்று
மையை கட்டியெழுப்புவதற்கான அர
சியலை முன்னெடுத்துள்ளனர். நாம்
அனைவரும் ஒன்றிணைந்து செயற்படு
வதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கி
யுள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்
அனைத்து மதங்களுக்கும். அனைத்து
கலாசாரங்களுக்கும். மதிப்பளிப்பதோடு
அனைவரும் இணைந்து வாழக்கூடிய
சூழலை ஏற்படுத்தும்.

அத்துடன் மொழி கலசாரம் ரீதியாக
எவரும் பிரிந்து செயல்படுவதற்கு இடம
ளிக்கப் போவதில்லை. அனைவரும்
ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்
துள்ளோம். நாம் அனைவரும் இலங்கை
யர்களே. வடக்கு கிழக்கு தெற்கு என
அனைத்துபகுதிகளிலும் வசிக்கும் மக்க
ளுக்கு சமமான உரிமை வழங்கப்படும்
- என்றார். (அ)

## இரத்ததான...

அங்கு வந்த மட்டக்களப்பு மாவட்ட
தேர்தல்கள் முறைப்பாடுகள் அலுவலகத்
தின் உத்தியோகத்தர்கள் அனுமதி
பெறப்படாமல் குறித்த ஏற்பாடுகள்
செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலும்
வேட்பாளர்கள் பங்கேற்கின்றமை
தொடர்பிலும் கிடைக்கப் பெற்ற
முறைப்பாடுகள் அடிப்படையில்
சோதனையிட வந்துள்ளதாக தெரிவித்
தனர்.

தேர்தல் ஆணைக்குழுவில் அரசியல்
கட்சியின் செயற்பாடுகளுக்கான அனு
மதிகள் பெறப்படாத காரணத்தினால்
அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்
கள்,கட்சியின் பதவி நிலை உறுப்பினர்
கள் அங்கு இருக்கமுடியாது என மட்டக்
களப்பு மாவட்ட தேர்தல்கள் முறைப்
பாடுகள் அலுவலகத்தின் உத்தியோகத்
தர்கள் தெரிவித்ததற்கு அமைவாக பாரா
ளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின்
பதவி நிலையினரும் அங்கிருந்து வெளி
யேறினர். பொதுநல நோக்குடன் இரத்த
தான நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்
ளதன் காரணமாக வேட்பாளர்கள்,
அரசியல் கட்சிகளின் பதவி நிலையி
லிருப்போர் இன்றி நிகழ்வினை கொண்டு
செல்லமுடியும் என அறிவுறுத்தல்கள்
விடுக்கப்பட்டதுடன் அறிவுறுத்தல்கள்
மீறப்படுமானால் நிகழ்வு இரத்துச்செய்
யப்படும் என உத்தியோகத்தர்களினால்
தெரிவிக்கப்பட்டது. (அ)

## தீர்வு கிட்டும் வரை தமிழ்த் தலைமைகள்...

இன்றைய தமிழரசுக் கட்சியோ இத்த
கைய சிந்தனைகளுக்கு வெகுதூரத்தில்
உள்ளது. அகில இலங்கைத் தமிழ்க் காங்
கிரசும் தனிவழி செல்வதையே நீண்ட
காலமாக தனது கொள்கையாகக்
கொண்டிருந்தபோதிலும் உள்ளூராட்
சித் தேர்தலையொட்டி சில தனிநபர்க
ளையும் குழுக்களையும் இணைத்து ஒரு
கூட்டணியாக செயற்படுவதாகக்
காண்பிக்க முற்படுகிறது.

கூட்டமைப்பிலிருந்து தனிவழி
சென்ற தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஈழ
மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி,
தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ
மக்கள் விடுதலைக்கழகம், ஜனநாயக
போராளிகள் ஆகிய அமைப்புகள்
இணைந்து, ஜனநாயக தமிழ் தேசிய கூட்
டணி என்ற ஒரு வலுவான கட்டமைப்
பாக கடந்த பல வருடங்களாகச்
செயற்பட்டு வருகின்றோம்.

அத்துடன் இம்முறை உள்ளூராட்சித்
தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கிய
திலிருந்து சமத்துவக் கட்சியும்
இணைந்து எமக்கான ஓர் யாப்பின் அடிப்
படையில் தேர்தல் ஆணையகத்தில்
பதிவு செய்து எமக்கான சின்னத்தையும்
பெற்று, ஒரு கட்டமைப்பை ஏற்படுத்
தப்படுத்தி செயற்பட்டு வருகின்றோம்.

தந்தை செல்வாவால் உருவாக்கப்
பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்
குப் பின்னர் ஒழுங்கமைக்கப்பட்ட,
நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு
ஜனநாயகபூர்வமான ஐக்கிய முன்ன
ணியாக ஜனநாயக தமிழ்த் தேசியக்
கூட்டணியே இயங்கி வருகிறது. இதனை
வலுப்படுத்தவேண்டியது மக்களின்
கடமையும் பொறுப்புமாகும் என்று
வேண்டிக்கொள்கின்றோம்.

ஏனைய கட்சிகளுடனும் இணைந்து
தமிழ் மக்களின் உரிமைப் போராட்
டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி
யானது தொடர்ந்தும் முயற்சிகளை
மேற்கொண்டு வருகின்றது. நீங்கள்
அளிக்கும் ஆதரவும் ஆணையுமே இந்த
முயற்சியை மேலும் முன்கொண்டு
செல்ல துணை புரியும்.

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர்
தாயகத்திற்கு அதிகாரப் பகிர்வு கோரி
தமிழ்த் தலைமைகள் தொடர்ந்து
போராடி வருகின்றன. ஆனால் யுத்தம்
முடிவடைந்த பின்னரும்கூட ஆட்சிக்கு
வந்த பேரினவாதச் சிந்தனை கொண்ட
சிங்கள கட்சிகளோ முப்படைகள்,
பொலிஸ், புத்தபிக்குகள் மற்றும் தொல்
லியல் திணைக்களம், வனவளத்துறை,
மகாவலி அபிவிருத்திச் சபை ஆகிய
வற்றைப் பயன்படுத்தி தமிழர் தாய
கத்தை சிங்கள பௌத்த ஆக்கிரமிப்
பின்கீழ் கொண்டுவரும் பெரும்திட்டம்
ஒன்றை செயற்படுத்தி வருகின்றன.

இவற்றிற்கு எதிராக மண்ணையும்
மக்களையும் பாதுகாக்கும் பெரும்
பொறுப்பு தமிழ் மக்கள் மீதும் தமிழ்க்
கட்சிகள் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றது.

இவற்றிற்கு எதிராக, பாராளுமன்
றத்திற்குள்ளும் வெளியிலும் இலங்கை
அரசாங்கத்தின் இனவாத, மதவாத நடவ
டிக்கைகளை வெளிப்படுத்தி, ஊடகங்
களின் ஊடாகவும் இராஜதந்திர சமூகத்
தினுடனான சந்திப்புகளூடாகவும்
அனைத்து விடயங்களும் வெளிக்
கொணரப்பட்டன. ஆனால், அனைத்து
இந்நடவடிக்கைகள் சிங்கள ஆட்சியா
ளர்களின் ஆக்கிரமிப்பு மற்றும் கலாசார
படுகொலை நிகழ்ச்சித் திட்டத்தில்
குறிப்பிடத்தக்க மாறுதல் எதனையும்
ஏற்படுத்தவில்லை.

இந்நிலையில் ஆக்கிரமிப்பு நடவடிக்
கைகளுக்கு ஓரளவேனும் முடிவுகட்டி
எமது மண்ணையும் மக்களையும் காக்க
வேண்டுமாயின், அதற்கு முதற்படியாக
பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை
முழுமையாக நிறைவேற்றி மாகாணசபை
தேர்தலை விரைந்து நடத்த வேண்டு
மென ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
இந்தியாவின் தலையீட்டைக் கோரியது.

கடந்த ஏழு வருடங்களாக மாகாண
சபைத் தேர்தல்களை பிற்போட்டு மாகா
ணசபை அதிகார[illegible]
மூலம் கையாள்வதனூடாக காணிகளை
அபகரித்தல், சிங்கள குடியேற்றங்களை
நிறுவுதல், பௌத்தமக்கள் வாழாத
இடங்களில் புதிதாக புத்த கோயில்கள்
என அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு இன்
றும் தொடர்கின்றது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள்
ஆணையகம் உட்பட இந்தியா, அமெ
ரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற
நாடுகள் சில அழுத்தங்களை இலங்கை
அரசின்மீது ஏற்படுத்தினாலும்கூட அது
ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே
நடைபெறுகின்றது.

அதேவேளை தெற்காசிய பிராந்தியத்
தில் அமைதியைப் பேணும் பணியின்
பெரும்பங்கை இந்தியாவின் பொறுப்பி
லேயே உலக நாடுகள் விட்டுள்ளன என்ப
தும் கவனிக்கப்பட வேண்டிய விடயமா
கும். எனவே இப்பிராந்தியத்தில் அமை
திக்கும் சமாதானத்திற்குமான இந்தியா
வின் பங்களிப்பு என்பது சர்வதேசத்தி
னால் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்
பட்டுள்ளதால் அவற்றையும் கருத்திலெ
டுத்து செயற்படுவது தமிழ்த் தலைமைக
ளினால் தவிர்க்க முடியாத தொன்றாகும்.

தமிழர் தரப்பில் தமிழ் மக்களுக்கான
அரசியல் தீர்வு தொடர்பாக ஒருமித்த
கருத்தும் ஒருங்கிணைந்த செயற்பாடும்
இல்லாமையின் காரணமாக தங்களால்
எதுவும் செய்ய முடியாதிருப்பதாக இந்
தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம்
தொடர்ந்து கூறிவருகின்றது.

ஆகவே தமிழ்க் கட்சிகள் மத்தியில்
ஏற்படும் ஐக்கியம் என்பதே சிங்கள
ஆக்கிரமிப்புகளிலிருந்து தமிழ்ப் பிர
தேசத்தைப் பாதுகாக்க ஓரளவிற்காவது
உதவியாக இருக்கும் என்பதையும் நாங்
கள் இந்த அறிக்கையினூடாக வெளிப்
படுத்த விரும்புகின்றோம்.

தீர்வு முயற்சிகள் தடைப்பட்டு,
தமிழ்க் கட்சிகள் மத்தியில் முரண்பாடு
கள் தொடர்ந்து, ஐக்கியமின்மை ஏற்பட்
டதன் காரணமாக கடந்த பாராளுமன்
றத் தேர்தலில் அதிருப்தி அடைந்த தமிழ்
மக்கள் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான
சக்தியான தேசிய மக்கள் சக்திக்கு பெரு
மளவிலான ஆதரவைக் கொடுத்தார்கள்.

இதன் விளைவாக ஆக்கிரமிப்பு
நோக்கமுள்ளதும் கலாசார படுகொலை
நிகழ்ச்சி நிரலைக் கொண்டதுமான தமது
கொள்கைகளை தமிழ் மக்கள் ஆதரிக்
கின்றார்கள் என்றும் ஏற்றுக் கொண்டுள்
ளார்கள் என்றும் தாயகக் கோட்பாட்டை
தமிழ் மக்கள் கைவிட்டுள்ளனர் என்றும்
ஆளும் கட்சியினர் பிரசாரங்களை
முடுக்கிவிட்டுள்ளனர்.

அது மாத்திரமல்லாமல் இவர்கள்
சந்திக்கும் சர்வதேச இராஜதந்திரிகள்
மத்தியில் வடக்கு-கிழக்கிலிருந்து தமிழ்
மக்கள் தமக்கு பெருமளவு ஆதரவை
வழங்கியிருப்பதாகவும் தமிழ்க் கட்சிகள்
ஒதுங்கி நின்றால் தாமே பிரச்னைகளைத்
தீர்த்து வைப்பதாகவும் கதையளக்கத்
தொடங்கியுள்ளனர்.

இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்
படவேண்டும். இந்த அபாயத்திலிருந்து
விரைந்து மீண்டெழக்கூடிய தேவை
தமிழ் மக்களுக்குள்ளது. இதற்கான முழு
முயற்சிகளையும் ஜனநாயகத் தமிழ்த்
தேசியக் கூட்டணி முன்னெடுக்கும் என்
பதையும் இந்த விஞ்ஞாபனத்தின் மூலம்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

கடந்த ஏழு வருடங்களாக மாகா
ணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டே
வருகின்றது. வடக்கு - கிழக்கைப்
பொறுத்தவரையில் எமது நீண்ட
போராட்டத்தில் கிடைத்த, ஒரு தீர்வு
என்பதற்கு அண்மித்த ஒரு முயற்சியாக
இந்த மாகாணசபை முறைமை இப்
பொழுது அமைந்திருக்கின்றது.

ஆனால் சிங்கள அரசுகள் அனைத்
தும் இந்த மாகாணசபை முறைமையை
எதிர்த்தே வந்திருக்கின்றன. மாகாண
சபைகளுக்கு வழங்கப்பட்ட பல அதி
காரங்கள் மீளப்பறிக்கப்பட்டுள்ளன.
மாகாண சபைத் தேர்தல்களை நடாத்
தாமல் தமது முகவர்களான ஆளுநர்
களை நியமித்து தாம் விரும்பியவாறான
நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர்.
இதனூடாக சிங்களக் குடியேற்றங்கள்,
பலாத்காரமாக காணிகளைப் பறிமுதல்
செய்தல், நிர்வாகம் மற்றும் வேலை
வாய்ப்புகளில் சிங்களவர்களுக்கே முக்கி
யத்துவம் போன்ற பல விடயங்களைச்
செய்து வருகின்றனர்.

தற்போதைய அநுர அரசும்கூட
நாங்கள் தேர்தலை நடத்துவோம் என்று
கூறுகின்ற போதிலும் அதனை நடத்துவ
தற்கு விருப்பமற்றவர்களாகவே இருக்
கின்றது. இதனால் குறைந்த பட்சமாக
எங்களுக்குக் கிடைத்த அதிகார பரவ
லாக்கம்கூட எமது கைகளைவிட்டு
நழுவும் நிலையிலேயே தமிழ்ச் சமூகம்
இருக்கின்றது. எனவே எமக்குக் கிடைத்த
அதிகாரப் பரவலாக்கலை முழுமையாகக்
கைவசப்படுத்தி அடுத்த கட்டத்தை
நோக்கி நகர்ந்து செல்ல வேண்டும்.-என்
றுள்ளது. (அ-5)

## வாக்குரிமையை..

எவ்வாறாயினும் தேர்தல் திகதி
நெருங்குகையில் இந்த நிலைமை மாறும்
எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்
ளார். (அ)

## வட்டுக்கோட்டை...

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில்
முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை
பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற
னர். (அ-05)

## வவுனியா...

ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ
தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பல
மருத்துவமனைகளுக்கு அண்மையில்
மேற்கொண்ட ஆய்வு விஜயத்தின்போது
அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் வசிக்கும்
மக்களுக்கு உகந்த மற்றும் திறமையான
நோயாளி பராமரிப்பு சேவைகளை
வழங்கும் நோக்கில் மாவட்டத்தில்
நிறுவப்பட்டுள்ள அரச மருத்துவமனை
களில் கிடைக்கும் மனித மற்றும் பௌ
தீக வளங்களை மேம்படுத்தும் நோக்
கில், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக
அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ
இந்த சிறப்பு ஆய்வில் ஈடுபட்டார்.

கிராமப்புற மக்களுக்கு தரமான,
சிறந்த சுகாதார சேவைகளை வழங்கு
வதை முதன்மையான நோக்கமாகக்
கொண்டு, சுகாதார அமைச்சு மாவட்ட
அளவில் அந்த மருத்துவமனைகளில் உள்ள
குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றுக்கு
உடனடி தீர்வுகளை வழங்கியுள்ளது.

நாட்டில் மூன்றாம் நிலை சுகாதார
சேவைகளை வழங்கும் 53 அரசு மருத்து
வமனைகளில், ஏழு மருத்துவமனைகள்
அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில்
இல்லை என்பதை அமைச்சர் நினைவு
படுத்தினார். ஹொரணை, அவிசாவளை
மற்றும் கம்பஹா ஆகிய மூன்று மருத் து
வமனைகளைத் தவிர, மீதமுள்ள நான்கு
மருத்துவமனைகள் வடக்கு மாகாணத்
தின் நான்கு முக்கிய மருத்துவ மனைகள்
என்றும் அமைச்சர் கூறினார். (அ)

## உயர்தர...

1ஆம், 2ஆம் இடங்களையும், நாடு தழு
விய ரீதியில் 3ஆம், 5ஆம் இடங்களை
யும் பெற்றுள்ளனர்.

ஜமுனானந்தா பிரணவன் (முதலாம்
இடம்) மற்றும் ஜமுனானந்தா சரவணன்
(இரண்டாம் இடம்) ஆகிய இருவருமே
இவ்வாறு சாதனை படைத்துள்ளனர்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்
பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று
சனிக்கிழமை வெளியிடப்பட்டன.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு
333,183 மாணவர்கள் தோற்றினர். அவர்
களில் 253,390 பேர் பாடசாலை விண்
ணப்பதாரர்கள் மற்றும் 79,793 பேர் தனி
யார் விண்ணப்பதாரர்களாவர்.


க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறு
பேறுகளை www.doenets.lk, www.results.
exams.gov.lk ஆகிய இணைய தளங்களில்
பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்
பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

பாப்பரசர் பிரான்சிஸ் மறைவு

## வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு





வவுனியா, ஏப். 27

பாப்பரசர் பிரான்சிஸ் நினைவாக வவுனியாவில் நேற்றுத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் மறைவையடுத்து நேற்று நாடு பூராகவும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்தவகையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, மாவட்ட அரசாங்க அதிபர் பீ. ஏ. சரத் சந்திரவால் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டதுடன், பாப்பரசர் நினைவாக மெழுகு வர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதல் கத்தோலிக்க மதகுருமார்கள், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (எ-10)

## ஏ 9 வீதியில் விபத்து; இளைஞன் மரணம்

கெக்கிராவை, ஏப். 27

கண்டி - யாழ்ப்பாணம்(ஏ9) வீதியில் போவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததாக கெக்கிராவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த லொறி, எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது மோட்டார் சைக்கிள் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரும் படுகாயமடைந்துள்ள நிலையில் கெக்கிராவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராத புரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளின் சாரதியான இளைஞன் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அநுராதபுரம் - மரதன்கடவல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது இளைஞன் ஆவார்.

இது தொடர்பில் கெக்கிராவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# விழுமியங்கள், ஒழுக்க நெறிகளை அரசாங்கம் மீண்டும் நிலைநாட்டும்

### ஜனாதிபதி அநுர குமார திட்டவட்டம்

தம்புள்ள, ஏப். 27

உலகில் எந்தவொரு நாடும் தனது கலாசார விழுமியங்களையும் கடந்த கால மரபுகளையும் மறந்து முன்னேற்றத்தை நோக்கி நகர்ந்ததில்லை என்றும், தற்போதைய அரசாங்கம் நாட்டில் இழந்து வரும் விழுமியங்கள் மற்றும் ஒழுக்க நெறிகளை மீண்டும் நிலைநிறுத்தி நாட்டைக் கட்டியெழுப்பி வருவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க ரங்கிரி தம்புள்ள ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் தங்கவேலிகளுடன் கூடிய போதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சட்டத்தின் மூலம் மாத்திரம் ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியாது. மதத் தத்துவத்திற்கு ஒரு பாரிய சமூக வகிபாகம் இருக்கின்றது. கிராமத்தின் விகாராதிபதி உள்ளிட்ட மதத் தலைவர்களுக்கு அந்தப் பணியில் முதன்மையான பொறுப்பு உள்ளது.

நாட்டுக்குத் தேவையான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றத்தில் அறிவார்ந்த மற்றும் நல்லொழுக்கத்தால் போசிக்கப்பட்ட எதிர்கால தலைமுறையை



உருவாக்குவதற்காக, கல்வித் துறையில் விரிவான மாற்றத்தை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதேபோன்று, எதிர்காலச் சந்ததியினரை போதைப் பொருட்களிலிருந்து காப்பாற்றுவதற்காக, திட்டமிட்ட வகையில் செயல்படும் போதைப்பொருள் வியாபாரக் கும்பல்களைத் தடுக்க அரசாங்கம் விரிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது - என்றார். (எ)

# திசைகாட்டிக்கு வாக்களிப்பது இஸ்ரேலுக்கு வழங்கும் ஆதரவே

### இம்ரான் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலை, ஏப்.27

முஸ்லிம் மக்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமாகும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலை, கிண்ணியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசாங்கம் இஸ்ரேலைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது. இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்து ஸ்ரிக்கர் ஒட்டிய இளைஞன் ருஸ்தியை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

இஸ்ரேலியர்கள் இலங்கையில் அவர்களது சமயத்தலங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள அரசாங்கம் அதற்கு அரச பாதுகாப்பை வழங்கி வருகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இது தொடர்பில் அண்மையில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது சரியான பதில் கொடுக்க முடியாது அரசாங்கம் மழுப்பிய விடயம் நம் அனைவருக்கும் தெரியும்.

பொத்துவில் அறுகம்குடாவில் யூதர்கள் பாலர் பாடசாலை நடத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதோடு அதற்காக 5இற்கும் மேற்பட்டோருக்கு நீண்ட நாள் விசா வழங்கி வருகின்றது. இதனால் அவர்கள் நிரந்தரமாக இங்கு தங்கியுள்ளார்கள். இவர்களது பாதுகாப்பைக் காரணம் காட்டித் தான் பொத்துவில் பகுதியில் முஸ்லிம்கள் சிலர் கைதுசெய்யப் பட்டமை அனைவருக்கும் நினைவில் இருக்கும். அறுகம்குடா பகுதியில் பாலர் பாடசாலை நடத்துகிறோம் என்ற போர்வையில் யூதர்கள் நிரந்தரமாக ஏன் தங்கியுள்ளார்கள் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இங்கிருந்து முஸ்லிம்களுக்கெதிரான சதித் திட்டம் ஏதும் தீட்டப்படுகின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது

இந்த அரசாங்கம் இஸ்ரேலியர்களைப் பாதுகாத்து பராமரிக்கும் அளவுக்கு முஸ்லிம்களுக்கு எதிராக அடக்கு முறைகளை பிரயோகித்து வருகின்றது என்பதை நாம் இவற்றிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனவே, இந்த அரசாங்கத்துக்கு வாக்களிப்பதானது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமானது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்"- என்றார். (எ)

## சட்டவிரோத மதுபானத்துடன் ஹொரணையில் ஒருவர் கைது

களுத்துறை, ஏப். 27

ஹொரணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருகொட சந்திப் பகுதியில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.


ஹொரணை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், குருகொட போருவதண்ட பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 19 லீற்றர் 500 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக ஹொரணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



பாப்பரசர் பிரான்சிஸ் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக, தேசிய சர்வமத குரு ஐக்கியத்தின் பிரதிநிதிகளான தம்மரன்ஸி நாயக தேரர், சிவ சிறீ பாபுசர்மா குருக்கள், அல் - ஹாஜ் அஷ்-ஷெய்யித் ஹஸன் மௌலானா, நிஷான் சம்பத் குரே அடிகளார் உட்பட சர்வமத தலைவர்கள், கொழும்பிலுள்ள இலங்கைக்கான வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்று, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் நேற்று முன்தினம் தமது இரங்கலைப் பதிவு செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.